Registered as a Newspaper

பக்கங்கள் – 24

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 297

புதன்கிழமை
18 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

2022
மொத்தத் தேசிய உற்பத்தி
எதிர்மறை
7.8%

குறுகிய காலத்தில் எதிர்மறை பொருளாதாரத்தை

# நேர்மறைப் பொருளாதாரமாக மாற்றியமைத்த ரணில் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கும் அத்தியாவசியமானவர்



2024
மொத்தத் தேசிய உற்பத்தி
நேர்மறை
5.0%

ஒரு நாட்டின் பொருளாதாரம், எதிர்மறை நிலையில் காணப்படும் போது, அதனை நேர்மறைப் பொருளாதாரமாக மாற்றுவதென்பது மிகக் கடினமான பணியாக இருப்பதுடன், அதற்காக எடுத்துக் கொள்ளப்படும் காலம் அதிகமானது. அதற்கும் கூட, சரியான நோக்கும் விரிவான திட்டமும் காணப்பட வேண்டும். எனினும் உலகின் அனைத்து நாடுகளையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி இன்று, இலங்கையின் பொருளாதாரத்தை மிகக் குறுகிய காலத்திற்குள் நேர்மறை பொருளாதாரமாகக் கொண்டு வருவதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ வெற்றி கண்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, பொருட்களின் விலை வானளவு உயர்ந்து சென்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்நாட்டு பொது மக்கள் அனுபவித்த துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, மக்களால் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவிற்கு விலைகளைக் குறைக்க ஜனாதிபதி ரணிலால் இயன்றது. 2022ல் 584 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பருப்பு இன்று 310 ரூபாவாகவும், 40 ரூபாவாக இருந்த குறைந்தபட்ச பஸ் கட்டணம் இன்று 28 ரூபாவாகவும், 470 ரூபாவாக இருந்த பெற்றோல் ஒரு லீற்றர், 332 ரூபாவாகவும், 4664 ரூபாவாக இருந்த வீட்டுப் பாவனைக்கான கேஸ் சிலிண்டர் ஒன்றின் விலை, இன்று 3690 ரூபாவாகவும், 400 ரூபாவாக இருந்த கோதுமை மா ஒரு கிலோவின் விலை, 140 ரூபாவாகவும், 1750 ரூபாவாக இருந்த செத்தல் மிளகாய் ஒரு கிலோவின் விலை, இன்று 850 ரூபாவாகவும், 630 ரூபாவாக இருந்த ரின் மீனின் விலை இன்று 330ரூபாவாகவும் 280 ரூபாவாக இருந்த வெள்ளைச் சீனி ஒரு கிலோ இன்று 270 ரூபாவாகவும் 1240 ரூபாவாக இருந்த பால்மாவின் விலை 950 ரூபாவாகவும், 48 ரூபாவாக இருந்த வெள்ளை முட்டையொன்றின் விலை 42.50 சதமாகவும் 1506 ரூபாவாகவிருந்த தோல் நீக்கப்பட்ட ஒரு கிலோ கோழியிறைச்சியின் விலை, 1050-1300 ரூபாவாகவும் குறைக்கப்பட ரணில் நடவடிக்கை எடுத்தார்.

இன்று மக்கள் பெற்றுக் கொண்டுள்ள இவ் வெற்றி, மிக இலகுவாகக் கிடைத்த வெற்றியல்ல. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ அவர்களிடம் இருந்த திறமையும் வாய்ந்த தலைமையும் நிகரற்ற திட்டங்களுடனும் கூடிய செயற்பாட்டின் வாயிலாகப் பெற்றுக் கொண்டுள்ள இவ் வெற்றிகளை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமாயின் இத் திட்டங்களைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்திச் செல்ல வேண்டும். இதுவரை வந்த பயணப் பாதையை மாற்றியமைக்கவோ மீண்டும் பின்னோக்கிச் செல்லவோ முடியாது.

எதிர்வரும் 5 வருடங்களிலும் இந்த நிவாரணங்களைப் பெற்றுக் கொண்டு, மக்களின் பொருளாதாரத்தையும் நேர்மறை மட்டத்தில் பேணிக் கொண்டு, அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்ற வேண்டுமாயின், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ அவர்களை வாக்குகளால் மீண்டும் ஜனாதிபதியாக்குவதே எம்மிடமுள்ள ஒரே மாற்றுவழி.

இப்போதுள்ள நடைமுறையை மாற்றினால்

## நாடு ஸ்திரநிலையை இழக்கும் IMF எச்சரிக்கை விடுக்கின்றது

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை அமுல்படுத்தி வரும் வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமான மட்டத்தில் காணப்படுகின்றது எனவும், அதற்கான அரச அர்ப்பணிப்பு, உயர்ந்த மட்டத்தில் உள்ளதாகவும் IMF குறிப்பிடுகின்றது. எனினும் நாட்டின் பொருளாதாரத்தின் முன்னிலையில் காணப்படும் ஆபத்து இன்னமும் கடந்து போய்விடவில்லை என்பதுடன், இப்போது காணப்படும் நடைமுறையை மாற்றினால் நாடு ஸ்திர நிலையை இழந்துவிடக் கூடும் எனவும் அவ்வமைப்பு சுட்டிக் காட்டுகின்றது. எதிர்வரும் தேர்தலில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் அத் தீர்மானம் நாட்டின் நாளைய பொருளாதாரத்தைத் தீர்மானிப்பதில் வலுவான காரணியாக அது அமையும் எனவும் அவ் அமைப்பு குறிப்பிடுகின்றது.

### நாட்டு மக்களின் சுகாதாரச் சேவைகள் தொடர்பில் 524 பில்லியன்

மக்களுக்கு சுகாதார நலனை வழங்குவது மிகவும் முக்கியமானது. நாட்டின் வரி செலுத்தும் மக்களுக்கு, மிகவும் சொகுசாகவும் தரம் வாய்ந்ததுமான சுகாதார சேவையை வழங்குவதற்காக இம்முறை 7,140 மில்லியன் ரூபா. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மருந்துகள், சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள், உபகரணங்களைப் போன்றே சுகாதார ஊழியர்களின் சம்பளங்களுக்கும் பயிற்சிகளுக்கும் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### முன்னெப்போதும் இல்லாதவாறு கல்விக்கென 546 பில்லியன்

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகின்ற அதேவேளை, தேசத்தின் பிள்ளைகளின் நாளைய எதிர்காலத்திற்காக ஜனாதிபதி அவர்கள் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். பிள்ளைகளின் போசாக்கிற்கும், கல்விக்குமென இதுவரை, வரலாற்றில் அதிக நிதி ஒதுக்கப்பட்டது கடந்த ஆண்டில் தான்.

பாடசாலைகளின் மதிய உணவுக்காக 2020ல் ஒதுக்கப்பட்ட 2.3 பில்லியன் ரூபா 2023ல் 12.5 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், இக் கால எல்லைக்குள், பயன்பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

பாடசாலைப் புத்தகங்களுக்காக 2018ல் ஒதுக்கப்பட்ட 4.8 பில்லியன் ரூபா நிதி 2023ல் 23 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### மேலும் சொகுசான பொதுப் போக்குவரத்துச் சேவைக்கென ஒதுக்கப்பட்ட நிதி 430 பில்லியன்

நாட்டின் போக்குவரத்துச் சேவை மேலும் ஒழுங்குபடுத்தப்பட்டு வினைத்திறன் மிக்க சேவையாக மாற்றப்படும் நோக்கில் மேலும் சொகுசான பொதுப் போக்குவரத்துச் சேவையை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக 5,320 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு, போக்குவரத்துத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏனைய அபிவிருத்திகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் ஊடாக மக்கள் சொகுசு வாய்ந்த போக்குவரத்துச் சேவையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் உரித்தாகும்.

### சமூக நலன்புரிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 714 பில்லியன்

நாட்டின் ஒவ்வொரு பிரசையும் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான பொருளாதாரப் பின்னணியொன்றை ஏற்படுத்தி வறுமையை ஒழிப்பது, இவ் அரசு முன்னுரிமை வழங்கும் இன்னுமொரு முக்கிய பிரிவாகும்.

அஸ்வெசும, நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு அனுகூலங்களை வழங்குவதற்காக, இப்போது நடைமுறையிலுள்ள நிகழ்ச்சிகள் தொடர்பில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறுமையை ஒழிப்பதற்காக, அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஊடாக ஒரு குடும்பத்திற்கு அதிக பட்சம் ரூபா 15,000 வரை உதவித் தொகையாக வழங்கப்படவுள்ளது.

அவ்வாறே முதியோருக்கான கொடுப்பனவு, மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவு மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு என்பவற்றை அதிகரித்ததன் மூலம் அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பு உருவாகும்.

(CR 43239)




மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper

பக்கங்கள் – 24

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39 | கதிர் : 297

புதன்கிழமை 18 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 02 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"அப்ப இவ்வளவு நாளும் பொய்களையே கேட்டு சலிச்சுப்போன சனத்துக்கு இண்டையோட நிம்மதி கண்டியளோ"

## சமுத்திரத் தீர்த்தத்தில் நீராடியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 18

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவில் கடலில் நீராடிய குடும்பத் தலைவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். அம்பன், குடத்தனையைச் சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது-54) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுர்த்திரத் தீர்த்தம் நேற்று இடம்பெற்றது.

மாயவப் பெருமான் தீர்த்தம் ஆடியதன் பின்னர் கடலில் குளித்துக் கொண்டிருந்த குடும்பத் தலைவர் நீரில் மூழ்கிய நிலையில் அவசர அம்புலன்ஸ் ஊடாக பருத்தித்துறை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார். (அ-ஒ-26)

# தேர்தல் பரப்புரைகள் இன்று நள்ளிரவுடன் முடிவு



கொழும்பு, செப்ரெம்பர் 18

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் பரப்புரைகளுக்கு இன்று நள்ளிரவு 12 மணியுடன் தடை விதிக்கப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

23

## அநுரவையும் சஜித்தையும் தும்புத்தடியால் விரட்டுங்கள்

### மன்னாரில் ரணில் ஆவேசம்

மன்னார், செப். 18

செப்ரெம்பர் 21 ஆம் திகதி மிக முக்கியமான நாளாகும். உங்கள் திருமண தினத்தின் பின்னர் முக்கியமான நாள் இது. இந்த நாடு நெருக்கடியில் இருந்தபோது சஜித்தோ அநுரவோ முன்வந்தார்களா? அவர்கள் எங்கிருந்தனர்? பொறுப்பேற்க முடியாது என்று பின்வாங்கினார்கள். இன்று நாட்டில் அனைத்தும் இருக்கிறது. பொருளாதாரம் முன்னேற ஆரம்பித்துள்ளது. மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். விவசாயம் செய்கின்றனர்.

23

## ரணிலும் அநுரவும் அரசியல் தேனிலவில்

### சஜித் சாடல்

கொழும்பு, செப். 18

தற்பொழுது ரணிலும் அநுரவும் திருமண விருந்து

23

## சஜித்துக்கு ஏன் ஆதரவு? மாணவர் ஒன்றியம் கேள்வி

யாழ்ப்பாணம், செப். 18

இலங்கைத் தமிழரசுக் கட்சி எந்த அடிப்படையில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கியது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேள்வி

23

## நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா இன்று!

யாழ்ப்பாணம், செப். 18

வரலாற்றுச் சிறப்புமிக்க நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 12ஆம் திகதி அலங்கார உற்சவத்துடன் ஆரம்பமாகி ஏழாம் நாளாகிய இன்று கப்பல் திருவிழா இடம்பெறும். (அ-ஒ-100)

## சார்ள்ஸ் எம்.பி.யை சந்தித்தார் ரணில்

மன்னார், செப். 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் வீடு தேடிச் சென்று நேற்று நேரில் சந்தித்துள்ளார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற 'ரணிலால் இயலும்' பேரணியில் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

23

## மருத்துவர்கள் இன்று ஒருநாள் புறக்கணிப்பு

கொழும்பு, செப். 18

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று காலை 8 மணி தொடக்கம் நாளை காலை 8 மணி வரையில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

23

### புலமைப்பரிசில் பரீட்சை

## வினாத்தாள் கசிவு: வினாக்கள்நீக்கம்

கொழும்பு, செப். 18

நிறைவடைந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் முதலாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களை நீக்குவதற்கு யோசனை முன்வைக்கப்

23



### தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில்

## வட்டுக்கோட்டையில் நேற்று 'நமக்காக நாம்'!

### பெருந்திரளானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், செப். 18

தமிழ்ப் பொதுவேட்பாளராக போட்டியிடும் பா.அரியநேந்திரனுக்கு ஆதரவாக தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை கிளையின் ஏற்பாட்டில் மூளாய் - வேரம் பகுதியில் உள்ள அக்கினி வைரவர் கோவில் முன்றலில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு 'நமக்காக நாம்' எனும் தொனிப்பொருளிலான பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

23

## பணத்தைப் பெற்றுக்கொண்டே எம்மில் சிலர் சஜித்துக்கு ஆதரவு

### பொதுவேட்பாளரை ஆதரித்த கூட்டத்தில் முன்னாள் எம்.பி. சரவணபவன் காட்டம்

யாழ்ப்பாணம், செப். 18

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தாருங்கள் என எம்மில் சிலர் பணத்தைப்பெற்றுக் கொண்டு தமிழ் மக்களிடம் வந்து கெஞ்சுகின்றனர். நாம் என்ன அடிப்படையில் அவரை ஆதரிக்க முடியும்? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன். வட்டுக்கோட்டையில்

23

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




අනුර කුමාර දිසානායක
அநுர குமார திசாநாயக்க
Anura Kumara Dissanayake

செப்டெம்பர் 21 இல் உங்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையையும் செல்லுபடியாகின்ற அடையாள அட்டையையும் எடுத்துக்கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குச்சென்று மறுமலர்ச்சி யுகத்தின் பங்காளியாக மாறுங்கள்.

www.akd.lk

(CR 43240)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வாக்கெண்ணும் நிலையமாக யாழ். மத்திய கல்லூரி

## ஒழுங்கமைப்பு களஆய்வு



யாழ்ப்பாணம், செப். 18

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுங்கமைப்புகள் குறித்து யாழ். மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் கள ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

இதில் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஜே.ஹாலிங்க ஜெயசிங்க, மூத்த பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (ஒ-66,27,20)

# கோத்தா தூக்கியவர் அமைச்சரவையில்!

யாழ்ப்பாணம், செப். 18



முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவிக்காலத்தில் அமைச்சர் பதவியிலிருந்து தூக்கப்பட்ட ஒருவர் இப்போதும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கிறார் என முன்னாள் நீதியமைச் சரும் ஜனாதிபதி வேட்பாளருமான விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவிக்காலத்தில் அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர் ஒருவர் ஜப்பானிடம் இலஞ்சம் கேட்டதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

அதே அமைச்சர் இப்போதும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கிறார் என விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். எனினும் அந்த அமைச்சரின் பெயரை விஜயதாஸ ராஜபக்ச வெளியிடவில்லை. (ச-6)

# வன்முறை ஆர்ப்பாட்டம் பகிர்ந்தால் நடவடிக்கை

கொழும்பு, செப். 18

அரசியல் இலாபத்துக்காக தவறாக வழிநடத்தும் வன்முறைச் சம்பவங்களைத் தூண்டக்கூடிய குறிப்பாக கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 'அரகலய' போராட்டம் தொடர்பான காணொலிகளை பகிர்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த கால நிகழ்வுகளை கொண்ட குறித்த காணொலிகள் தற்போது நடைபெறுவதுபோன்று தவறாக சித்தரித்து பொதுமக்களை தவறாக வழிநடத்தி, சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும்.

இதுபோன்ற, பிழையான காணொலிகளை சமூக ஊடகங்களில் பகிர்வதைத் தவிர்க்க வேண்டும். தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் பிழையான தகவல்களை பதிவிடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# உள்நாட்டுத் தூதுவர்கள் தேர்தல் பணிக்குத் தடை

கொழும்பு, செப்.18

வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் உள்ளூர் உத்தியோகத்தர்களும், தூதுவர்களும் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடமுடியாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுத் தூதுவராலயமொன்றில் கடமையாற்றும் உள்ளூர் உத்தியோகத்தர் ஒருவர் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்ததாகவும் தேர்தல் திணைக்களத்தின் பணிகளில் இந்த விடயம் உள்ளடக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார். (ச-45-6)

# வாக்காளர் அட்டை கிடைக்கவில்லையா?

கொழும்பு, செப். 18

இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள், இன்று முதல் தேர்தல் நாள் வரை தமது பிரதேசத்திலுள்ள தபால் நிலையத்துக்குச் சென்று வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் சுமார் 97 வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளன. (ச)

# சொத்து விவரம் சமர்ப்பிப்பு இழுத்தடிப்பில் எம்.பி.கள்!

கொழும்பு, செப். 18

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளைப் பெறுவதற்கு நாடாளுமன்றத் தலைவர்கள் கடும் சிரமம் மேற்கொள்ளவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


அதற்காக ஐந்து நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நினைவூட்டல் கடிதங்களுக்குப் பிறகு, 169 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொத்துப் பொறுப்பு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கையை இதுவரை சமர்ப்பிக்கவில்லை. அவர் சுகவீனமுற்றிருப்பதால், சொத்துப் பொறுப்பு அறிக்கை பின்னர் சமர்ப்பிக்கப்படும் என அவரது செயலாளர் ஒருவர் நாடாளுமன்றத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார் என்றும் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

உதவி செய்யாட்டிலும் பரவாயில்லை உபத்திரவம் செய்யாமல் இருங்கோ எண்டு வீட்டுக்கட்சியின்ர சட்டம்பியார் குரூப்பிட்ட ரெலிபோன்காரர் கெஞ்சத் தொடங்கிட்டினமாம். ஏற்கனவே வீட்டுக் கட்சியில ஒரே கொல்பாடு எண்டு தெரிஞ்சும், கட்சியின்ர மத்திய குழு எடுத்த முடிவை எல்லாரும் மதிப்பினம், தமிழ்ச் சனமும் அதைக் கேக்கும் எண்டு நினைச்சுத்தான் ரெலிபோன்காரர் முதலில சட்டம்பியார் ரீமோட டீல் பேசி இருக்கினம். அந்த டீலின்படிதான், கட்சியின்ர கொள்கை கோட்பாடெல்லாத்தையும் தூக்கி எறிஞ்சு போட்டு, ரெலிபோனுக்கு சப்போர்ட் எண்டு முடிவெடுத்து அறிக்கையும் விட்டிருக்கினம். அதில ஆகப்பெரிய பகிடி என்னெண்டால், ரெலிபோனுக்கு வீட்டுக்கட்சி சப்போர்ட் எண்டு எந்த மாவையர் அறிக்கை வாசிச்சாரோ, அதே மாவையர் கொஞ்சநேரத்தில கிளிநொச்சியில பொதுவேட்பாளருக்கு ஆதரவா மேடையேறி பேசியும் இருக்கிறார். அந்தளவுக்கு இருக்கு வீட்டுக்கட்சியின்ர ரெலிபோனுக்கு சப்போர்ட் பண்ணுற சீத்துவம்.

ரெலிபோன்காரருக்கு வாக்குப் போடுவம் எண்டு இருந்த சனங்கள் கூட, இப்ப சட்டம்பியார் சப்போர்ட்குடுக்கிறார் எண்ட ஒரே காரணத்துக்காக தங்கட முடிவை மாத்திப்போட்டினமாம்.குறிப்பா யாழ்ப்பாணம், கிளிநொச்சியில தான் இந்த நிலைமை. கிளிநொச்சியில சிறியருக்கு சப்போர்ட்டா 30 ஆயிரத்துக்கும் மேல வாக்காளர்கள் இருக்கினம். அவையெல்லாம் சிறியரை வீட்டுக்கட்சியின்ர தலைமைப்பதவியில இருக்க விடாமல் சட்டம்மியார் செய்த சதியால கொதிச்சுப் போய் இருந்தவை. இப்ப அவையெல்லாம் சட்டம்பியார் சப்போர்ட் பண்ணுற ரெலிபோன்காரருக்கு எதிரா மாறிட்டினம். எதிரிக்கு நண்பனும் எதிரி எண்டதுதான் அவையின்ர வியாக்கியானம். அதே கதைதான் யாழ்ப்பாணத்திலையும். கட்சியை நாசமாக்கினது சட்டம்பியார் எண்ட கோபத்தில இருந்த யாழ்ப்பாணத்துச் சனங்களும், அவர் சப்போர்ட் பண்ணுற ஆளுக்கு வோட் பண்ணக்கூடாது எண்டதில தெளிவா இருக்கினமாம்.


கூட்டிக்கழிச்சுப் பார்த்தால், ரெலிபோன் காரருக்கு விழ இருந்த ஒரு அறுபதாயிரம் வாக்கு, சட்டம்பியார் சப்போர்ட் பண்ணினதால அவுட். சட்டம்பியாரின் வாக்கு வங்கியைப் பற்றித் தெரியும் தானே. போனமுறை எலக்சனிலயே கடைசிமட்டும் முக்கித்தக்கி, கனபேரின்ர சாபத்தையும் வாங்கித்தானே வெல்லமுடிஞ்சது. அப்ப அவரால ரெலிபோன்காரருக்கு வாற ஆதாயத்தை விட நட்டம் தான் பலமடங்கு. இது ரெலிபோன்காரருக்கும் இப்ப வடிவா தெரிஞ்சு போட்டுது.அதால சட்டம்பியார் ரீமை எலக்சன் முடியுமட்டும் சும்மா இருந்தாலே புண்ணியம் எண்டு சொல்லுப்பட்டிருக்காம். ஆமை புகுந்த வீடு மாதிரி தங்கட நிலைமை மாறக்கூடாது எண்டு கடைசி நேரத்திலயாவது ரெலிபோன்காரருக்கு ஞானம் வந்தாலும் சேதாரத்தை தடுக்க ஏலாது கண்டியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான நான் - ஜனக ரத்நாயக்க. சட்ட விரோத மற்றும் நெறிமுறையற்ற மின் கட்டண அதிகரிப்புக்காக அரசாங்கத்திற்கு எதிராகக் குரல்கொடுத்துப் போராடியவன். க.பொ.த (சாதாரண) மற்றும் (உயர்)தரப் பரீட்சைகள் எழுதும் மாணவர்களுக்கு மின்சார வசதிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியதோடு, இந்த நாட்டின் குரலற்ற மக்களுக்காகப் போராடியதனால் இறுதியில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நீக்கப்பட்டவன்.

நான் சாதி, சமய விருப்பு வெறுப்பு இல்லாத, சமத்துவத்தில் முழுமையாக நம்பிக்கை கொண்ட ஒரு உண்மையான இலங்கையன்.

தற்போதைய அரசியல் மற்றும் தன்னிச்சையான நடவடிக்கைகள் காரணமாக, மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் பல்வேறு இன்னல்கள் மற்றும் இடையூறுகளுக்கு ஆளாகிறார்கள், சுதந்திரத்திற்குப் பின்னர் சோர்ந்து போயிருக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் பறிக்கப்பட்டவர்களின் அடுத்த ஜனாதிபதியாக என்னைத் தேர்ந்தெடுக்குமாறு இந்த நாட்டு மக்களாகிய உங்களை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எனவே, சாதி, சமய, இன, மத நம்பிக்கைகள் இன்றி, எமது நாட்டிலுள்ள ஒவ்வொரு சமூகத்தினரும் ஒன்று கூடி, இந்த நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல, என்னைச் சுற்றி அணிதிரளுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

# ஜனக ரத்நாயக்க

(CR 43234)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலவச முதலுதவிச் சேவை

யாழ்ப்பாணம், செப்.18
வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர், தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தெல்லிப்பழைப் பிரிவினர் யாழ்.கிளையின் அனுசரணையுடன் அடியவர்களுக்கான இலவச முதலுதவிச் சேவையை கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்கொண்டனர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தெல்லிப்பழைப் பிரிவுத் தலைவர் எஸ்.நாகேஸ்வரன் தலைமையில் முதலுதவிச் சேவை முன்னெடுக்கப்பட்டது. (ரி-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.18
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 5மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும், இளஞ்சைவப்புலவர் பிரசங்க வாரிதி 'மெஞ்ஞானமும் விஞ்ஞானமும்' எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.
சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ரி)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விட முடியும். உறவுகளால் சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படும். முடிவை துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். உறவுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவு செய்ய நேரிடும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும்.

# பெரிய வெங்காயம் விலை அதிகரிப்பு

கொழும்பு, செப். 18
தற்போது சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. உள்நாட்டில் பயிரிடப்படும் பெரிய வெங்காயம் கிலோவொன்று 260 ரூபா முதல் 280 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
பெரிய வெங்காய இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமையே, விலை அதிகரிப்புக்குக் காரணமென சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)


சாவ. மருத்துவமனை

# சிற்றுண்டிச்சாலை உடைத்து 20 இலட்சம் ரூபா திருட்டு

யாழ்ப்பாணம், செப்.18
சாவகச்சேரி மருத்துவமனை சிற்றுண்டி நிலையம் உடைக்கப்பட்டு அங்கிருந்த 20 இலட்சம் ரூபா பணமும் பால்மா உள்ளிட்ட பெறுமதியான பொருள்களும் களவாடப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. அதிகாலையில் நிலையத்தைத் திறக்க வந்த சிற்றுண்டி நிலையம் நடத்துபவர் உடைக்கப்பட்டுள்ளதைக் கண்டு மருத்துவமனை நிர்வாகத்துக்கும் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-9)

# டெங்கு அபாயம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.18
நாட்டில் தற்போது டெங்கு நோய் அதிகரிக்கக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 38,167 பேர் டெங்கு நோயுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில் மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் பதிவாகியுள்ளனர்.
மேல் மாகாணத்தில் இதுவரையில் 15,973 பேர் டெங்கு நோயுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தின் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு 17 பேர் உயிரிழந்துள்ளனர். (ச)



நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பெருமளவு பக்தர்கள் புடைசூழ நடைபெற்றது. (ச-45-17)

# தியாகதீபம் நினைவாக நல்லூரில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப். 18
தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டு அவரின் நினைவாகத் தியாகதீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் இடம்பெறவுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கணிக்க முடியாத முடிவுகள்

நாட்டின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. இன்று நள்ளிரவுடன் பரப்புரைக்கான அவகாசம் முடியும் நிலையில் வேட்பாளர்கள் தங்கள் இறுதிக்கட்டப் பரப்புரைகளில் தீவிரமாக இறங்கியிருக்கின்றனர். கடந்தகாலத் தேர்தல்களை விடவும் இம்முறை வித்தியாசமான களச்சூழல் நிலவுவதால் யார் அதிகாரத்துக்கு வரப்போகின்றார்கள் என்பது கணிக்க முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. அதிலும் வாக்கு கணக்கெடுப்பு இரண்டாம் கட்டத்துக்குச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இம்முறை தேர்தல் களத்தில் முன்னெப்போதும் இல்லாத பரபரப்புத் தொற்றியிருக்கின்றது.

தெற்கில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாகக் களமிறங்கியிருக்கின்றார். எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய மக்கள் சக்தியிலும், அநுரகுமார திஸாநாயக்க தேசிய மக்கள் சக்தியிலும் களமிறங்கியிருக்கின்றனர். சிறீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளராக நாமல் ராஜபக்ச களமிறங்கியிருந்தாலும் அவர் தேர்தல் பந்தய ஓட்டத்தில் இல்லை. நாமல் ராஜபக்சவும் இம்முறை வெற்றியை எதிர்பார்த்துக் களமிறங்க வில்லை. இந்தநிலைமையில் தெற்கில் மும்முனைப் போட்டி நிலவுகின்றது. இதைவிடவும் வடக்கு, கிழக்கில் இம்முறை களமிறக்கப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளருக்கு ஓரளவு ஆதரவு அலை தென்படுவதையும் காணமுடிகின்றது. ரணிலுக்கு, சஜித்துக்கு, அநுரவுக்கு வெற்றிவாய்ப்புகள் இருக்கின்றன என்று கருத்துக்கணிப்புகள் வெளியாகின்றபோதும், இப்போது வரையில் யார் வெற்றிபெற்று அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள் என்பதைத் திடமாகக்கூறமுடியாதிருக்கின்றது. வேட்பாளர்கள் தீவிரமான பரப்புரைகளை மேற்கொண்டிருகின்றபோதும் பெரும்பாலான மக்கள் இன்னமும் யாருக்கு ஆதரவளிப்பது என்பதைத் தீர்மானிக்காதிருக்கின்றனர் என்பதையும் சில கருத்துக் கணிப்புக்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த மிதக்கும் வாக்குகள் எந்தப் பக்கம் சாயும் என்பதைக் கணிக்க முடியாதிருப்பதால் தேர்தல் முடிவுகளையும் கணிக்க முடியாதிருக்கின்றது.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் மனங்களை வெல்வதற்கான எந்த முயற்சிகளையும் தெற்கு வேட்பாளர்கள் செய்யவில்லை என்றே கூற வேண்டும். தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளில் அவர்கள் அதிக அவதானத்தைச் செலுத்தவில்லை. ஒப்புக்குச் சப்பாணியாக தங்கள் தேர்தல் அறிக்கைகளில் இனப்பிரச்சினை, தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளைத் தொட்டுச் சென்றிருக்கின்றமை தமிழ் மக்களை ஏமாற்றியிருக்கின்றது. அதனால் தமிழ் மக்கள் தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்த தமிழ் பொது வேட்பாளர் பக்கம் சாயக்கூடும். அவ்வாறு நடக்குமானால் தெற்கின் பிரதான வேட்பாளர்களுக்கு அது பெரும் பின்னடைவாகவே இருக்கப்போகின்றது. கடந்த காலத் தேர்தல்களில் தெற்கு அரசியல்வாதிகள் தங்கள் பிரதான பரப்புரை ஆயுதங்களாக இனவாதம், பௌத்த மேலாதிக்கவாதம் என்பவற்றையே கையிலெடுத்திருந்தனர். அதில் வெற்றியும் பெற்று சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகளையும் அறுவடை செய்திருந்தனர். ஆனால் இம்முறை மனநிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும், அதன்பின்னர் சாதாரண மக்களின் வாழ்க்கையில் விழுந்த அடியும் அவர்களின் மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது என்று தெரிகின்றது. கடந்தகாலங்களில் அரசியல் தலைமைகளின் இனவாத, பௌத்த மேலாதிக்கவாதப் பொறிக்குள் சிக்கியிருந்த சிங்களப் பெரும்பான்மை மக்கள் இம்முறை தங்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம் தற்போதுள்ள தேர்தல் களத்தைத் தளம்ப வைத்திருக்கின்றது.

மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம், நடக்கவுள்ள தேர்தலில் எதிர்பாராத மாற்றங்களை உருவாக்கக்கூடும். இன்னமும் தங்கள் வாக்குகளை யாருக்கு அளிப்பது என்பதைத் தீர்மானிக்காதுள்ள மக்கள் கூட்டம் எந்தப் பக்கம் சாயும் என்பதும் தேர்தல் முடிவுகளில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும். இத்துணை அனுபவங்களின் பின்னர் தங்களுக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை மக்கள் சரியாகப் பயன்படுத்துவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.




# வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் தயார்!

## வாக்குப்பெட்டிகளும் அனுப்பி வைப்பு

**கொழும்பு, செப். 18**

**ஜனாதிபதித் தேர்தலில் வாக்குப் பெட்டிகளாகப் பயன்படுத்தப்படவுள்ள அட்டைப் பெட்டிகள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.**

எதிர்வரும் 20ஆம் திகதி தேர்தல் அலுவலர்கள் உரிய வாக்குப்பெட்டிகளை வாக்குச் சாவடிகளுக்கு விடுவிப்பார்கள்.

வாக்குச்சீட்டுகள் பெரிய அளவில் இருப்பதால், இம்முறை மரப்பெட்டிகளுக்குப் பதிலாக அட்டைப் பெட்டிகளைப் பயன்படுத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

அதன்படி 3 அளவுகளில் அட்டைப் பெட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. அரச அதிகாரிகளுக்கு அனைத்து அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் பணிகளில் பங்கேற்கும் அதிகாரிகள், அதற்கான ஏற்பாடுகளை தயார் செய்து, குறிப்பிட்ட நாளில் பணிகள் நடைபெறும் இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

## 60,000 பொலிஸார் தேர்தல் கடமையில்

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 60 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பொதுமக்கள் பாதுகாப்புக்காகவும் விசேட நடவடிக்கைகளுக்காகவும் 54 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகளை கடமையில் ஈடுபடுத்த முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அதன் எண்ணிக்கை 60 ஆயிரமாக அதிகரித்துள்ளது. எதிர்வரும் நாட்களில் நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



## குழப்பம் விளைவித்தால் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, செப். 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் அமைதியின்மை ஏற்பட்டால் பொலிஸாருக்கு துப்பாக்கிகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். இவ்வாறான சூழ்நிலைகளை கட்டுப்படுத்துவதற்காகவே பொலிஸாருக்கும் பாதுகாப்பு படையினருக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்லும் போது விசேட பாதுகாப்பு திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ச)

## அடுத்த மாதம் இலத்திரனியல் கடவுச்சீட்டு

கொழும்பு, செப். 18

புதிய இலத்திரனியல் கடவுச்சீட்டை வழங்கும் பணி அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக, சிப் அட்டைகள் இல்லாத வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை அமைச்சகம் வழங்கும்.

புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டை உருவாக்குவதற்கான அனுமதியை பெறுவதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் போலந்துக்குச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**நாளை**

**19.09.2024**

வியாழக்கிழமை - புரட்டாதி - 03

சுபநேரம் : 07.33 - 09.03

ராகுகாலம் : 01.33 - 03.03

**நாளொரு நல்வார்த்தை**

**செயல்புரியும் ஆற்றல் உள்ளவன் செயல் புரிவான் அது இல்லாதவன் வெறுமனே பேசிக்கொண்டு இருப்பான்.**

- பெர்னாட்ஷா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்கான புதிய அணுகுமுறையை இந்தத் தேர்தலில் கைக்கொள்வோம்

## ஜெயசேகரன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், செப். 18**
**ஜனாதிபதித் தேர்தலைத் தீர்வுக்கான புதிய அனுகுமுறையாக அனுகி தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் என வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெயசேகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் விடுத்துள்ள அறிக்கையில், கடந்த 75 வருடங்களாகத் தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் பலவகையில் போராடியும் இலங்கை அரசு தமிழ்மக்களுக்கான எந்த தீர்வையும் இதுவரை வழங்கவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆகக் குறைந்த அதிகாரமான 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் ஐயா வரை ஏமாற்றப்பட்டார்கள்.

ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எமது தீர்வுக்கான புதிய அனுகுமுறையாக அனுகி ஒவ்வொரு தமிழ்மக்களும் இதனைப் பயன்படுத்தி சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும்.

ஒவ்வொரு தமிழ்மகனும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் இணைந்து உரிமைக்கான அங்கீகாரத்துக்குப் பங்களித்து உள்ளோம் என்பதை உறுதிப்படுத்தி உங்கள் வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் -என்றுள்ளது. (ஒ-66)

# 9 ஆவது சரத்தில் கைவைக்கமாட்டோம்!


## அநுர தெரிவிப்பு



கொழும்பு, செப். 18
அரசமைப்பின் 9 ஆவது சரத்து தொடர்பில் வீண்அச்சம் கொள்ள வேண்டியதில்லை. எமது ஆட்சியில் அச்சரத்து நீக்கப்படமாட்டாது என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நல்லாட்சிக்காலத்தில் புதிய அரசமைப்புத் தொடர்பில் கருத்துகள் பெறப்பட்டன. இதன்போது 9 ஆவது சரத்து நீக்கப்பட வேண்டும் என தமிழ், முஸ்லிம் தலைவர்கள்கூட யோசனை முன்வைக்கவில்லை.

2015 காலப்பகுதியிலும் இனவாதப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. தேசியக்கொடி மாற்றப்படும் எனவும் பிரசாரம் செய்கின்றனர். இவ்வாறு இனவாதப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை. மக்கள் மாறிவிட்டனர். 9 ஆவது சரத்து மற்றும் தேசியக் கொடி மாற்றப்படமாட்டாது - என்றார். (ச-44)



# பொதுவேட்பாளருக்கு ஆதரவு வட்டுக்கோட்டை கிளை பிரசாரம்

யாழ்ப்பாணம், செப்.18
தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையினரால் பிரசாரப் பணிகள் வடடுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு, காரைநகர், மாதகல் உட்பட்ட பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

பிரசாரத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளை மகளிர் அணி மற்றும் இளைஞர் அணி ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-125,100)

# தமிழரின் உணர்வை வெளிப்படுத்துவோம்

**காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், செப். 18
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் அனைவரும் உணர்வுடன் தமிழ்ப் பொதுவேட்பாளரைத் தெரிவு செய்ய வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

15 வருடத்தை தாண்டியும் எமது இனத்துக்கு எந்த வித தீர்வும் கிடைக்கவில்லை.

வரும் ஜனாதிபத் தேர்தலை வாய்ப்பாகப் பயன்படுத்தி எமது உரிமைகளையும் உணர்வுகளையும் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தவேண்டும்.

தமிழராகிய நாம் பல பேரை இழந்திருக்கிறோம் பலர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இவர்களுக்கான நீதி கோரி நாம் கடந்த 15 வருடமாகப் போராடி வருகிறோம்.

ஜனாதிபத் தேர்தலினூடாக அரசாங்கத்துக்கு தெளிவான செய்தியொன்றை வெளிப்படுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-20)

# தமிழர்கள் முட்டாள்களில்லை

## நிரோஸ் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், செப். 18
பேரினவாதத் தலைவர்களுக்கு இனியும் வாக்களிக்கமுடியாது என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

அச்சுவேலியில் இடம்பெற்ற தமிழ் பொதுவேட்பாளரை முன்னிறுத்திய பரப்புரைக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குத் தேவை என வேட்பாளர்கள் முண்டியடிக்கின்றனர். அவர்கள் தமிழ் மக்களிடத்தில் வாக்குகளைக் கேட்கும் போது. கடந்த காலத்தில் தமது அரசியல் நீரோட்டத்தில் எந்தளவு தூரம் இனவாத அணுகுமுறைக்குள் இருந்தனர் என்பதை சிந்திக்கவில்லை. எனவே எமது பிரச்சினைகளை முன்னிறுத்தும் தமிழ் வேட்பாளருக்கே வாக்களிப்போம் என்பதில் உறுதியாக இருப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25)

# ஜே.ஆர். ஆட்சியில் யாழ்.நூலக எரிப்பு

## வேட்பாளர் பாணி விஜேசிறிவர்த்தன யாழில் பரப்புரை

யாழ்ப்பாணம், செப்.18
ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தின் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்திலேயே அந்த கட்சியைச் சேர்ந்த குண்டர்கள் குழுவால் யாழ். நூலகம் எரியூட்டப்பட்டது. இதனால் தமிழ் மக்கள் தமது கடந்த கால கலாசார பாரம்பரியத்தின் மதிப்புமிக்க பகுதியை இழந்தனர்.

-இவ்வாறு யாழ். பொது நூலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் பாணி விஜேசிறிவர்த்தன தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:
இந்த நூலகத்தில் உலகில் எங்கும் கிடைக்காத பல்லாயிரக்கணக்கான அரிய நூல்கள் இருந்தன. இந்த நூலகத்தை எரித்த பின்னர், இந்தக் கும்பல் நகரத்தில் தாக்குதல் நடத்தியதுடன், தமிழ் மக்களின் கலாசாரம் சார்ந்த ஏராளமான நினைவுச்



சின்னங்களை அழித்தது.

இப்போது மீண்டும், முழு உலகப் பொருளாதாரமும் நெருக்கடியில் சிக்கியுள்ள சூழ்நிலையில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளை நடைமுறைப்படுத்து [illegible] துள்ளார்- என்றார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

அம்பாறை, செப். 18
அம்பாறை சம்மாந்துறைப் பகுதியில் வீடொன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

ரிப்பிட்டர் ரக துப்பாக்கியே குறித்த படுகொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)



# மீண்டும் இருளில் நாட்டைத் தள்ளாதீர்

## ரணில் வேண்டுகோள்

**கொழும்பு, செப். 18**

**வளமான மற்றும் நிலையான பொருளாதாரம் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமா அல்லது நாட்டை மீண்டும் வரிசை யுகத்துக்கு தள்ளுவதா என்பதை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தீர்மானிக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

பதுளையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற 'ரணிலால் இயலும்' பேரணியில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டை இருளில் மூழ்கடிக்கும் வரிசை யுகத்துக்கு இடமளிக்கவேண்டாம். நாட்டின் பொருளாதாரத்தை ஸ்தி ரப்படுத்துவதற்காக கடந்த 2 வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டத்தை வலுவாக நடைமுறைப்படுத்த மக்களிடம் ஆணை கேட்கிறோம்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக கடந்த இரண்டு வருடங்களில் நாம் முன்னெடுத்த வேலைத் திட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில் மக்கள் எனக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)



# மயிலத்தமடு விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரத்துக்கு தமது அரசாங்கத்தினால் தீர்வு காணப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற்றதையடுத்து பாதுகாப்பு வலயமாகக் காணப்படும் விவசாயிகளின் காணிகள் மீண்டும் விவசாயத்துக்காக வழங்கப்படும். 10 இலட்சம் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்படுவார்கள் - என்றார். (ச)

# 4,411 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 18

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 4,411 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 1,379 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 3,032 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளில் 3,828 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச)



# வற்வரியை ஒழிப்பேன்

## அநுர தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

உணவு, கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ள வற் வரி முற்றாக நீக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக அக்குரஸ்ஸேவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உணவு, கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்கு கொண்டு வரப்பட்டுள்ள வற் வரி முற்றிலும் நீக்கப்படும். மின் கட்டணத்தைக் குறைக்கும் திட்டம் மிகக் குறுகிய காலத்துக்குள் செயற்படுத்தப்படும். வாழ முடியாமல் தவிக்கும் குடும்பங்களுக்கு 10,000 ரூபாவும், மிகவும் கஷ்டப்படும் நபருக்கு 17,500 ரூபாவும் வழங்கப்படும். உள்ளவற்றைக் கைவிட்டு அரசியலை பொதுச்சேவையாக மாற்ற வேண்டும் என்பதே நம்பிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரகுமார ஆட்சிக்கு வந்தால் பல்கலையில் 'ராக்கிங்' நடக்கும்



## சுரேன் ராகவன் எச்சரிக்கை

கொழும்பு, செப். 18

நாட்டை அநுரவுக்கு கொடுத்தால் நாளை நாடு இருளில் மூழ்கும். பல்கலைக்கழகங்களில் பகிடிவதை கலாசாரத்தை ஜே.வி.பி. சார்ந்த குழுக்கள் தான் முன்னெடுத்தன. ஆனால் தற்பொழுது 95 வீதமான பகிடிவதைகளை நிறுத்தியுள்ளோம். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

செப்ரெம்பர் 22ஆம் திகதி காலை கிழக்கில் சூரியன் உதிக்கும் போது நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியிருப்பார். ஹாவட் பல்கலைக்கழக நண்பர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர் என்னுடன் பேசினார். ஜனாதிபதி முன்னெடுக்கும் திட்டம் முன்மாதிரியானது. ஆபிரிக்காவில் வீழ்ச்சியடைந்துள்ள நாடுகளை மீட்க அவரை அனுப்ப முடியுமா என்று கேட்டார். பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு இன்று என்ன நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டை எரித்த திஸாநாயக்க போன்றவர்கள் அன்றி ரணில் போன்றவர்கள் தான் மக்களுக்குத் தேவை- என்றார்.

(அ-ஒ,இ)

# பிரசார பஸ்களால் ரூ. 200 கோடி வருவாய்

கொழும்பு, செப்.18

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பஸ்கள் பயன்படுத்தப்பட்டதால் தனியார் பஸ்களுக்கு கடந்த ஒரு மாத காலத்துக்குள் 200 கோடி ரூபாவுக்குமேல் வருமானம் கிட்டியது என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கடைசி பிரசாரக் கூட்டத்துக்காக மட்டும் ஆயிரத்து 500 வரையான பஸ்கள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியே அதிகளவான பஸ்களை பெற்றிருக்கக்கூடும் என தான் மதிப்பிடுவதாகவும், கடந்த 20 நாள்களிலேயே பிரதான கட்சிகள் அதிகளவு பஸ்களை வாடகைக்கு பெற்றுள்ளன.

இலங்கை அரசியல் வரலாற்றில் இம்முறையே இவ்வாறு அதிகளவு பஸ்கள் பெறப்பட்டன எனவும் , 200 கோடியில் 100 கோடி ரூபாவரை இலாபம் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-44)


## வீடு / அனெக்ஸ் வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாண நகரை (Jaffna Town)
அண்டிய பகுதியில் 3 - 4 Km
தூரத்தில் வீடு / அனெக்ஸ்
வாடகைக்குத் தேவைப்படுகிறது.
தொடர்புகளுக்கு:-
**075 206 0093**


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 . 04 . 1975



உதிர்வு 21 . 09 . 2021

**அமரர் பாலசுப்பிரமணியம் பிறேம்லால்**
(மக்கள் வங்கி உத்தியோகத்தர்)
திதி- அபரபக்க பிரதமை


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கி விரைந்து
ஆண்டு மூன்று ஆனாலும்
கண் விட்டு மறையாது என்றும்
உங்கள் நினைவுகள்

04, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

உம்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### வேலாயுதம் பாலசிங்கம்



மலர்வு 09.02.1947
உதிர்வு 19.08.2024

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.09.2024) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அமரர் வேலாயுதம் பாலசிங்கம் அவர்களின் மறைவு 19.08.2024 நெஞ்சம் மறக்கவில்லை. அன்னமிட்டு அரவணைத்த கரம் தனையும் அன்புதனை புகட்டிய குரல்தனையும் மைத்துனர் சொல்லமுடியாத நினைவுகளாய் வாட்டுகிறது. நேர்வழி கொண்ட பார்வை உங்களிடத்தில் இருந்து கற்றுக்கொண்டேன். உங்கள் இதயத்தில் இருந்து வரும் சொற்களையும் கற்றுக் கொண்டேன். இறுதிவரை தலை குனியாது வாழ்ந்த வாழ்க்கைதனை இப்படித்தான் வாழ வேண்டும் என உணர்ந்தேன்.


இவ்வுலகில் பலர் இருக்கிறார்கள். ஆனால். இவ் உலகில் அறிவை அளவிடுபவர் யாருமில்லை. இந்த ஆத்மா தனக்கான இடத்தை அடைந்து விட்டது என்ற உணர்வில் உங்கள் ஆத்மா எல்லாம் வல்ல பாலகாளி அம்மன் பாதங்களில் உரித்தாகட்டும்.

இல.42. ஈச்சமோட்டை வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0762978905, 021 222 6438

**வேலாயுதம் சிவமூர்த்தி (மைத்துனர்)**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 12 . 1941



மறைவு 15 . 09 . 2024

### மூத்ததம்பி மார்க்கண்டு

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், இல 62/5 பிறவுண் வீதி 1ம் ஒழுங்கை யாழ்ப்பாணம் மற்றும் பிரான்சினை வதிவிடமாகவும் கொண்ட மூத்ததம்பி மார்க்கண்டு அவர்கள் (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகையா - ஞானப்பூங்கோதை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரி அவர்களின் அன்புக் கணவரும், வாசுகி, சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிசோபன், காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிருந்தாபன், அபி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மருதையனார் நாகேஸ்வரி (இந்திராணி) மற்றும் செல்வராணி, புஸ்பராணி, தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, ராசப்பா லோகநாதன், சோமசுந்தரம், தில்லைநடேசன் மற்றும் முத்துக்குமாரசாமி, செல்வநாயகி, காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், மீனா மற்றும் அமிர்தலக்சுமி, தில்லைத்திருச்சிற்றம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.09.2024) செவ்வாய்க்கிழமை பிரான்சில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No: 62/5 பிறவுண் வீதி
1ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
**தில்லைநடேசன் தங்கேஸ்வரி (சகோதரி)**
**077 431 9641**

(CS/56245) J-1

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 09.03.1936
மறைவு 13.09.2024

யா/ மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர்
திரு.ம.மணிசேகரன் அவர்களின்
அன்புத் தாயார்
அமரர்

### மங்களம் மகேஸ்வரி

அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்பதோடு, அன்னாரின்
இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

ஆசிரிய நண்பர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை

(CS 1385) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 09 . 1947



உதிர்வு 17 . 09 . 2024

### செல்லத்துரை சிவராசலிங்கம் (சிவராசா)

(அளவெட்டி ப.நோ.கூ.ச. கனரக வாகன சாரதி)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவராசலிங்கம் (சிவராசா) (அளவெட்டி ப.நோ.கூ.ச.கனரக வாகன சாரதி) அவர்கள் நேற்று (17.09.2024) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - கனகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும், நித்திய லட்சுமியின் பாசமிகு கணவரும், சுவேந்திரன், கல்பனா, கார்த்திகா (கனடா), சுதர்சனா (கனடா), கோபிதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தக்சலா, லசிதரன் (கனடா), தனஞ்சயன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், அஸ்வின், ஆதீஸ், அஞ்சனா, சஞ்சனா, அக்ஷரா, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் செல்வராசா (ஓய்வுபெற்ற அதிபர்), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாக்கியம், நடேஸ்வரி, ஞானேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2024) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**மகன் - சுவேந்திரன்**
**077 786 9604, 077 114 0255**

## மரண அறிவித்தல்



### திருமதி பாலராணி சண்முகராஜா

**முன்னாள் விரிவுரையாளர் (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**

முல்லைதீவு தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்படுமாகவும் கொண்ட திருமதி பாலராணி சண்முகராஜா அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான அருளம்மா அண்ணாமலை தம்பதிகளின் செல்வப்புதல்வியும் காலம் சென்ற பரமலிங்கம் சண்முகராஜா (முன்னாள் கல்வி அதிகாரி-யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி சசிகலா சுந்தர் அவர்களுடைய அன்பு தாயாரும் திரு சுந்தர் ஆறுமுகம் அவர்களின் பாசமிகு மாமியாரும் சஷ்டிகா மற்றும் க்ஷாரிகா அவர்களின் அம்மம்மாவும் காலம் சென்ற பாலகிருஷ்ணன் (பொறியியலாளர்) திரு பால மனோகரன் (எழுத்தாளர்- நிலக்கிளி, ஆசிரியர்-டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலை, கல்கிசையில் வியாழக்கிழமை (19.9.2024) அன்று காலை ஏழு முப்பது மணி தொடக்கம் பார்வைக்காக வைக்கப்பட்டு மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் வாழ்வுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெறும். அதனைத் தொடர்ந்து 2.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் தகனதுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
(CS 1390) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 06 . 1936



மறைவு 15 . 09 . 2024

### செல்வநாயகம் குணரத்தினம்

சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் குணரத்தினம் அவர்கள் கடந்த (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், தயாழினி (லண்டன்), பிரபாகரன்(லண்டன்), பாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வேணுகோபால் (லண்டன்), சசிகலா (லண்டன்), ரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கேசிகா, ஜெதுகுலன், கோகுலன், லக்சியா, தரணியா ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வராணி (லண்டன்) , செல்வரத்தினம் (கனடா), செல்வரஞ்சிதம் (ஜேர்மனி), காலஞ்சென்ற கருணாமூர்த்தி (சண்டிலிப்பாய்), ஜெகநாதன் (சங்கானை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.09.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கராச்சி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
**0212251824**

(CS/56237) J-1

## தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன்


அவர்களை ஆதரித்து

## மாபெரும் பொதுக்கூட்டம்


**இடம் : நல்லூர் சங்கிலியன் ( கிட்டு) பூங்கா**
**திகதி : 18.09.2024 (புதன் கிழமை)**
**நேரம் : பிற்பகல் 3.30 மணி**

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் அவர்களும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகளும், பல்கலைகழகச் சமூகத்தினரும் எழுச்சியுரை ஆற்றுவார்கள்.

**கட்சிகளைக் கடந்து தமிழினமாய் அலை கடலெனத் திரண்டு வருக!**




**மக்கள் புரட்சி வெல்லட்டும்!!**



X

சமூக விஞ்ஞான ஆய்வு மையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எப்போதும் மோசடிகளுக்கு எதிரான சஜித்.

- பொலிஸ்மா அதிபர் சட்டவிரோதமான முறையில் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தமை.
- மோசடியான "VFS வீசா உடன்படிக்கை" இரத்துச் செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்தமை.
- தரம் குறைந்த மருந்துப்பொருட்களை இறக்குமதி செய்தமைக்கு எதிராக கெஹேலிய ரம்புக்வெல்லவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தமை.
- நாட்டை திவாலாகிய நிலைக்கு கொண்டு சென்றமைக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் மூலம் வெளியில் கொண்டு வர முற்பட்டமை.
- அரசாங்கம் தரமற்ற சேதன உரத்தை இறக்குமதி செய்தமையால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை சட்டத்தின் மூலம் கையாள முற்பட்டமை.
- பெண்களின் உரிமைகளுக்காக இடைவிடாது குரல் எழுப்புகின்றமை.

## மக்களின் நண்பன் சஜித்.

- ஹுஸ்ம நிகழ்ச்சித்திட்டத்தினூடா
63 வைத்தியசாலைகள் அபிவிரு
செய்திருந்தமை.
- பிரபஞ்சம் நிகழ்ச்சித்திட்டத்தினூ
பிள்ளைகளுக்கு டிஜிட்டல் ஆய்
அடங்கிய 472 பாடசாலைகளுக்
வலுவூட்டியிருந்தமை.

## சிறந்த அணியைக் கொண்ட தலைமைத்துவம் சஜித்.

- பொருளாதாரத்தைக் கட்டியெழுப்
மற்றும் திறமையான அணி உள்
- மோசடிக்காரர்களற்ற திறமைசா
கொண்ட அணி உள்ளமை.
- நாட்டைக் கட்டியெழுப்ப தேவை
மற்றும் அதற்காக எப்போதும் அ
நேர்மையான அணி உள்ளமை.
- சகல பிரிவுகளிலும் தேசத்தை அ
செய்வதற்கு அவசியமான அறி
ஆற்றல் காணப்படும் ஒரே அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa

# “ எமது தேசத்தை உலகின் சிறந்த இராஜ்ஜியமாக உயர்த்தக் கூடிய ஒரே தலைவர் சஜித் ”

ூடாக
விருத்தி

னூடாக எமது நாட்டு
ஆய்வுகூடங்கள்
ருக்கு

ட

ழுப்பக்கூடிய சிறந்த
உள்ளமை.
சாலிகளைக்

வை கொண்ட
அர்ப்பணிக்கும்
மை.
த அபிவிருத்தி
றிவு மற்றும்
அணி உள்ளமை.

## நம்பிக்கையான மற்றும் நடைமுறைச் சாத்தியமான பொருளாதாரத் திட்டத்துடனான ஒரே வேட்பாளர் சஜித்.

- ஏற்றுமதியில் தங்கியிருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக வலிமையான அவதானத்தை செலுத்தி தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது.
- சமூகத்தின் இடைநிலை வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வலுவூட்டுவதற்காக வலிமையான நலன்புரித் திட்டம்.
- பொருளாதாரத்தின் கீழ் மட்டத்தில் காணப்படும் மக்களின் நலனை பேணுவதற்காக பரிபூரண பாதுகாப்பு வலையை உருவாக்குவது.
- நான்கு பிரதான பிரிவுகளாக பிரித்து மூலோபாயத்தை நடைமுறைப்படுத்தல்,
  - வலிமையான நிறுவனங்கள்
  - உறுதியான பொருளாதாரம்
  - நிலைபேறான அபிவிருத்தி
  - துரித பாதுகாப்பு வலை
- பொருளாதார சவால்களின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு பொருளாதாரக் கொள்கைகளை தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்வாங்குவது.
- நடைமுறைப்படுத்துவதற்கான தெளிவான கால எல்லைகளைக் கொண்ட ஒரே பிரயோகத் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் சுவரொட்டி 6 இலட்சம் நீக்கம்!

கொழும்பு, செப். 18

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சட்டவிரோதமாக ஒட்டப்பட்ட ஆறு இலட்சத்துக்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, 1,500 பனர்கள் 1,550 கட்அவுட்கள் மேலும், 7,600 விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

**விதை நெல் விற்பனைக்கு**

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட மூன்றரை மாத B.G.34.6, மூன்று மாத B.G.312 இன விதை நெல் விற்பனைக்கு உண்டு.

**077 659 2044**

# தமிழ்த்தேசியக் கொள்கையின்படி தேர்தல் பகிஷ்கரிப்பே சிறந்த முடிவு

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

தமிழ் மக்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த்தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும். தமிழ்த்தேசியக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும். இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு குறித்துத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்காமல், அதேநேரம் தமிழ்த்தேசியத்தை முன்னிறுத்தி, சிங்கள - பௌத்த தேசியவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிக்காட்டக்கூடிய ஒரேயொரு தேர்தல் ஜனாதிபதித்தேர்தல் மாத்திரமேயாகும். இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் ஊடாக சிங்கள தேசியவாதம் உச்சத்தில் இருக்கையில் தமிழ்த்தேசியவாதம் மூலம் வலுவான அழுத்தத்தைப்பிரயோகிக்கமுடியும். பொதுவேட்பாளரைக் களமிறக்குவதன் ஊடாக பொதுக்கட்டமைமப்பினர் தமிழ்த்தேசியத்தைக் கைவிட்டு, ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க முயற்சிக்கிறார்கள். எனவே தமிழ் மக்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பதும், ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் ஒன்றுதான். பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த்தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.

எனவே இன்றளவிலே தமிழ்த்தேசியக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும். ஆகவே இனிவருங் காலங்களில் தமிழர்களை எவ்வகையிலும் ஏமாற்றமுடியாது என்பதை இந்தத் தேர்தலில் காண்பிக்கவேண்டும் - என்றார். (அ-ச)

## கேள்வி அறிவித்தல்

## சபைநிதி,முத்திரைத் தீர்வை நிதி வேலைத்திட்டம் - 2024

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ,மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(i)/(ii) and (iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன். வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 18.09.2024ந் திகதியிலிருந்து 01.10.2024ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிலிட்டு, தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 02.10.2024ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.09.25ந் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | யாவில் வீதி புனரமைத்தல் ,மாகியப்பிட்டி (NP/14/41(16)/W/CF/2024/27 | 2.37 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி ) | 63 நாட்கள் | 23,800.00 | 31.12.2024 |
| 02 | தோலோடை வீதி புனரமைத்தல்,பெரியவிளான் NP/14/41(16)/W/CF/2024/28 | 2.77 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 27,800.00 | 31.12.2024 |
| 03 | i)மதவடி (வெள்ளவாய்க்கால்) வீதி புனரமைத்தல் கட்டம் I, பண்டத்தரிப்பு iiNP/14/41(16)/W/CF/2024/29 | 6.68 | 63 நாட்கள் | C7 and C6 (வீதி) | 77 நாட்கள் | 66,800.00 | 14.01.2025 |
| 04 | உந்துசாந்தை வீதி புனரமைத்தல், கட்டம் I, சில்லாலை தெற்கு NP/14/41(16)/W/Add.Stampduty/2024/30 | 2.14 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 21,200.00 | 31.12.2024 |
| 05 | மானிப்பாய் பட்டினஉபஅலுவலகம் புனரமைப்பு NP/14/41(16)/W/CF/2024/31 | 3.09 | 63 நாட்கள் | C8 and C7 (கட்டடம்) | 63 நாட்கள் | 30,900.00 | 31.12.2024 |
| 06 | தலைமையலுவலக கட்டடம் புனரமைப்பு,மானிப்பாய் NP/14/41(16)/W/CF/2024/32 | 4.96 | 63 நாட்கள் | C8 and C7 (கட்டடம்) | 63 நாட்கள் | 49,600.00 | 31.12.2024 |

தலைவர்,
உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்.
18.09.2024.

(CR/43241) J-1

## வங்கக் கடலில் தீர்த்தமாடிய வல்லிபுரத்து ஆழ்வார்

யாழ்ப்பாணம், செப். 18

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி துன்னாலை சிறி வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயக் குரோதி வருட பெருவிழாவின் 16ஆம் நாளான சமுத்திரத் தீர்த்த உற்சவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை கற்கோவளத்திலுள்ள வங்கக் கடற்கரையில் வெகுசிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ஒ-66)

## கருத்துரையும், கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், செப்.18

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன்போபகே கருத்துரையும், திறந்த கலந்துரையாடலும் தோழர் சி.கா.செந்தில்வேல் தலைமையில் தேசிய கலை இலக்கியப் பேரவை கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ஒ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்களின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை

## இந்தச் செய்தியைச் சொல்ல தமிழர்கள் வாக்களிக்கவேண்டும்



**யாழ்ப்பாணம், செப். 18**

**தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழர்தேசம் என்றுமே சிங்கள ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற செய்தியை வெளிப்படுத்த வேண்டும் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவிபத்துள்ளது.**

இது தொடர்பாகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலானது தமிழர் தேசத்திக்குரிய தேர்தல் அன்று. அது சிங்களப் பேரினவாதம் தமது நாட்டுக்குரிய தமது ஜனாதிபதியைத் தேர்வு செய்யும் தேர்தலாகும். தற்போது போட்டியிடும் வேட்பாளர்களுள் எவர் சிறப்பாக இனவாதக் கோட்பாட்டை முன்னெடுத்துச் செல்வார் எனச் சிங்கள தேசம் தெரிவு செய்யும் தேர்தலே ஆகும். இந்தத் தேர்தலில் தமிழ்மக்களின் அபிப்பிராயங்கள் எவ்விதத்திலும் கணக்கில் கொள்ளப்படப் போவதில்லை.

சிறிலங்கா தேசத்தில் முதல் ஜனாதிபதியாகிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதல் தற்போது மக்கள் ஆணையின்றிப் பின்கதவால் ஜனாதிபதியாகிய அவரின் மருமகன் ரணில் விக்கிரமசிங்க வரை அனைத்து சிறிலங்காவின் ஜனாதிபதிகளும் தமிழ்மக்களின் உரிமைகளை ஒடுக்குவதிலும், எமது நிலங்களை ஆக்கிரமிப்பதிலும், எமது சமய கலாசார விழுமியங்களைச் சீரழிப்பதிலும், எமது வளங்களை அந்நியர்களுக்குத் தாரை வார்ப்பதிலுமே கூடிய கவனம் செலுத்தினர்.

இதுவரை நடந்த தேர்தல்களில் இத் தேர்தலே தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினையை முற்றாகப் புறந்தள்ளி சிங்கள தேசத்தின் பொருளாதாரப் பிரச்சினையை மையப்படுத்திக் கட்டமைக்கப்படுகின்றது. சிறிலங்காவின் படுபாதகமான பொருளாதார வீழ்ச்சிக்குத் தீர்க்கப்படாத இனப்பிரச்சினை முக்கிய காரணம் என்பது கூட வசதியாக இன்று மறைக்கவும், மறக்கவும் படுகின்றது.

ஈழத்தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாக எவ்வித வாக்குறுதிகளையோ அல்லது கரிசனைகளையோ வெளிப்படுத்தாத சிங்கள வேட்பாளர்களை ஆதரிக்கத் துடிக்கும் எந்தத் தமிழர் தரப்பையும், குறிப்பாக போலி தமிழ்த் தேசியத்தை நுனிநாக்கில் பேசிக் கொண்டு சிங்களப் பேரினவாதத்துக்கு சேவகம் செய்யும் அனைவரையும் தமிழ்மக்கள் எமது அரசியல் வெளியிலிருந்து முற்றாக அகற்ற வேண்டும்.

நாம் பலமாக இருந்த காலத்திலேயே சர்வதேச முன்னிலையில் சிங்கள தேசத்துடன் நடைபெற்ற பேச்சுக்கள் தீர்வுகளின்றி கபடத்தனமாக முடக்கப்பட்டன. எமது வரலாற்றுப் பாடத்தினூடாக இலங்கைத் தீவுக்கான புதிய அரசமைப்பு ஊடாகவோ, பேச்சுக்கள் ஊடாகவோ அல்லது உள்ளூர் பொறிமுறைகள் ஊடாகவோ தமிழ்மக்களின் பிரச்சினை நீதியான முறையில் தீர்க்கப்படாது. தமிழ்மக்களின் தேசியக் கேள்விக்குத் தமிழ்மக்களிடையே சர்வதேசத்தால் நடாத்திக் கண்காணிக்கப்படும் ஒரு சர்வசன வாக்கெடுப்பினூடாகவே தான் ஓர் நிரந்தர அரசியல் தீர்வை அடைய முடியும் என்பதை நாம் திடமாக நம்புகின்றோம். நிரந்தரமான தமிழர்தேசம் இந்தப் பூமிப்பந்தில் உதிக்கத் தொடர்ந்தும் பாடுபடுவோம் என உறுதி எடுத்துக் கொள்வோம் என்றுள்ளது. (அ-ஒ,66)



# இன,மதவாதங்களையே சுமக்கின்றது சஜித் அணி!

## சாடுகிறார் அநுர குமார

கொழும்பு, செப். 18

ராஜபக்சக்கள் மீண்டும் மீண்டும் கூறிக்கூறி உக்கிப்போன மதவாத, இனவாத போராட்டக் கோஷங்களை இப்போது சஜித் அணியினர் தோளில் சுமந்து செல்கின்றனர். இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முஸ்லிம் மக்கள் பல்லாயிரக்கணக்கில் இந்த நாட்டை மாற்றியமைப்பதற்காக எம்மைச் சுற்றி அணிதிரண்டுள்ள விதத்தை நாங்கள் கண்டோம். அதனால் இலங்கையில் முதல் தடவையாக மிகவும் தனித்துவமான அரசாங்கமொன்று அமையப்போகிறது. அது எப்படிப்பட்ட அரசாங்கம்? இதுவரை காலமும் பிறருக்கு எதிரான அரசாங்கங்களே அமைக்கப்பட்டன.

வடக்கு – கிழக்கிலுள்ள இனத்துவங்களுக்கு எதிரான அரசாங்கங்கள். அரசியல் மேடைகளில் ‘தேசம் ஆபத்தில். ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மை இனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தேசத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு வாக்குகளை அளிக்குமாறு’ கூறினார்கள். மதத்தை காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்கு வாக்குகளை அளிக்குமாறு கூறினார்கள். இப்போதும் அந்த வகையிலான தேர்தல் இயக்கமொன்றை நடைமுறையாக்க அவர்கள் முயற்சி செய்கிறார்கள். ராஜபக்சக்கள் மீண்டும் மீண்டும் கூறிக்கூறி உக்கிப்போன மதவாத, இனவாத போராட்டக் கோஷங்களை இப்போது தோளில் சுமந்து செல்பவர்கள் சஜித் அணியைச் சேர்ந்தவர்களாவர். அவை இத்துப்போன போராட்டக் கோசங்களாகும். அதனால் சில புதிய பொருட்களை தேடிக் கொள்ளுங்கள் என நான் சஜித் பிரேமதாஸவுக்கு கூறுகிறேன்.

வெள்ளைக்காரர்கள் எங்களைப் பிரித்தார்கள். கறுப்பு வெள்ளைக்காரர்களும் எங்களைப் பிரித்தார்கள். அதனால் இந்த நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலாயர், பறங்கியர் ஆகிய நாம் அனைவரும் ஒரே இலங்கை தேசத்தவரை கட்டியெழுப்புதல் பற்றிய எதிர்பார்ப்புடன் இருந்தோம். எமது ஆட்சியாளர்கள் அதற்கு வாய்ப்பளிக்கவில்லை. எம்மை பிரித்தார்கள். முட்டி மோதுகின்ற நிலைமையை உருவாக்கினார்கள். போரை உருவாக்கினார்கள். வடக்கையும் தெற்கையும் அழித்தார்கள். இப்போது எங்களுக்கு முதல் தடவையாக சிங்கள, தமிழ், முஸ்லிம், மலாயர், பறங்கியர் ஆகிய அனைவருமே ஒன்றாக சேர்ந்து ஒரே கொடியின் நிழலில் இருக்க தேசிய ஒற்றுமையை மலரச் செய்விக்கின்ற வாய்ப்பு உருவாகியிருக்கிறது. சஜித் பிரேமதாஸக்கள் பழைய மதவாத, இனவாத அழுக்குத் துணிகளையே மீண்டும் சலவை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் – என்றார். (அ-ஒ,இ)

## சோசலிசத்துக்காக போராடுவோம்!

சோசலிச சமத்துவக் கட்சியின் கூட்டம் கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 4மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் “போருக்கும் சிக்கன வெட்டுக்களுக்கும் சர்வாதிகாரத்துக்கும் எதிராக சர்வதேச சோசலிசத்துக்காகப் போராடுவோம்” எனும் விடயப்பொருளில் பாணி விஜேசிறி வர்த்தன உரையாற்றுவார். (ஒ-45)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 08 . 08 . 1940



ஆண்டவன் அடியில் 19 . 08 . 2024

**அமரர் திருமதி நமசிவாயம் புனிதவதி**

கடந்த 19.08.2024 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் திருமதி நமசிவாயம் புனிதவதி அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (18.09.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அன்புள்ளங்களையும் அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.

அம்பிகை [illegible]பன்சரி,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

தெய்வங்கேணி வீதி,
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(CS 632) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர ஆட்சியில் பிரதமர் பெண்

கொழும்பு , செப். 18
அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் நாங்கள் ஒரு பெண்மணியையே பிரதமராக நியமிப்போம் என தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.
மினுவாங்கொடையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அநுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் நாங்கள் நான்கு பேர் கொண்ட இடைக்கால அமைச்சரவையொன்றை நியமிப்போம். நாங்கள் அமைக்கும் அமைச்சரவையில் பிரதமரும் இருப்பார் பிரதமர் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ச-22.6)

## தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு வேட்பாளர்களிடம் இல்லை!

நவ சமசமாஜக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 18
ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வில்லை. தற்போது தனவந்தர்களுக்கான ஆட்சி காணப்படுகிறது. இனிவரப் போகும் ஆட்சியும் அவ்வாறானதாகவே அமையும்.
-இவ்வாறு கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நவ சமசமாஜக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரியந்த விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஏனைய பெரும்பான்மை இனத்தைப் போன்று சிறுபான்மையினரின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்படவேண்டும். எந்தவொரு வேட்பாளரும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வினை முன்வைக்க வில்லை. தற்போது தனவந்தர்களுக்கான ஆட்சி காணப்படுகிறது. இனிவரப் போகும் ஆட்சியும் அவ்வாறானதாகவே அமையும்.
நாடு அபிவிருத்தியடைய வேண்டுமெனில் மக்கள் மத்தியில் இணக்கப்பாடு எட்டப்படவேண்டும். அதுவே ஒருமைப்பாடாகும்- என்றார். (ச)


# நன்றிகள் பாராட்டுகின்றோம்

Best Wishes

## இதயம் கனிந்த நன்றிகள் யா/ இணுவில் இந்துக் கல்லூரி



இதமான இங்கிதமான பசுமையான செம்மண் பூமிஇணுவில் கிராமத்தில் அமைந்த இக்கல்லூரி பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரனும் வெற்றிலோயுதனும். சரவணபவனும் அருளாட்சி நடாத்தும் இடத்தில் அமைந்தமை சிறப்புத்தான்

இந்தக் கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றி 2024.09.07 அன்றைய தினத்துடன் சேவை நிறைவுபெற்ற எனது சகோதரி நிறைமதி தெய்வீகலிங்கம் அவர்கட்கு தாங்கள் எடுத்த மணிவிழா 2024.09.11 புதன்கிழமை அன்றைய நாளில் வெகு சிறப்பாக நேரமுகாமைத்துவம். வரவேற்பு உபசாரம். விருந்துபசாரம். கலை நிகழ்வுகள் என்ற வகையில் அனைத்தும் பாராட்டுக்குரியவை ஆசிரியர் கழகத்தலைவர் ஆக அணிசெய்த மதிப்பார்ந்த ஆசிரியர் திரு. சிவானந்தன் அவருக்கு இணையாக தார்மிகன் ஆசிரியர், கல்வி சாரா ஊழியர் தம்பி சிவசோதி மற்றைய ஆசிரிய மணிகள் யாபேரும் போற்றத் தகுந்தவர்கள்.

கல்லூரி அதிபரோ பரமசிவன் கடாட்ஷம்தான். எடுப்பான தோற்றமோ, அதிகாரத் தொனியான பேச்சோ எதுவுமே கிடையாது ஆனால்...... சாத்வீகமான ஒரு பார்வைநோக்கு எழுந்து சிறுஅசைவு எடுத்தாற் போதும்மாணவர்களும், ஆசிரியப் பெருந்தகைகளும் அந்த குறியீட்டுப் பாசையை, மொழியைவிளங்குவர். செயற்பாடுகள் சுவாரஸியமாக செம்மையாக நடைபெறும்.மணிவிழா என்பது ஒருமுறை வருவதுதான் அகவை 6 இல் ஆரம்பித்த கல்லூரிப் பயணம் 60 இல் நிறைவு பெறுகின்ற நாள் அது தனித்துவமாக கொண்டாடப்படவேண்டும். பதவி உயர்வுகள் பலமுறை வரும். இடமாற்றங்கள் பல தடவை நிகழும். ஆனால் மணிவிழா "ஏகம்சத்" உண்மையான ஒரு விழா அதனை வேறு நிகழ்வுகளுடன் இணைக்காமல்தான் கொண்டாடப்படவேண்டும். அதனை இக் கல்லூரி உணர்ந்தமை செயற்படுத்தியமை உளம் நிறைந்த மனம் குளிர்ந்த மகிழ்ச்சிகள்.

எல்லா கல்லூரிகளும் இதனை பின்பற்றினால் வாஸ்தவம் தான். சம்பந்தப்பட்டோருக்கு இதனை சமர்ப்பணமாக்கி, இணுவில் இந்துவின் மூல மூர்த்தியாம் அதிபர் அவர்களையும் உற்சவ மூர்த்திகளான ஆசிரிய கழகத்தலைவர் அவர்களுக்கும் அவருக்கு இணையாக எங்கள் தார்மிகன் ஆசிரியர் அவர்களுக்கும் பரிவார மூர்த்திகளான ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி வணங்குகின்றோம்.

பிரதி அதிபர் சுகுணா மிஸ் பாடிய தேவகானம் இதயத்தை தொடுகின்றது பிரமாதம் சங்கீத ஆசிரியை மொழிந்த இசைப்பாடல் அதற்கு நடனம் ஆற்றிய மாணவச் செல்வம் போற்றுதற்குரியவர்கள் ஆணிவேராக உள்நின்று நடனத்தை பயிற்றுவித்த அந்த நடன ஆசிரியை கலைமகள் சரஸ்வதிதான் எனது சகோதரி நிறைமதி தெய்வீகலிங்கம் ஆசிரியையும் பெறாமகள் விஷ்ணு மாயா அவர்களையும். சுகுணா மிஸ் அவர்களின் பிள்ளை நிலா வெள்ளி நிலா கௌரவித்து சிறப்பித்தமைக்கு நன்றிகள்

வாழ்க இணுவை இந்து. வளர்க மாணவ மணிகள் கல்விச் செயற்பாடுகள். இணைப்பாட விதான செயற்பாடுகளில் வியனுறு வளர்ச்சியை இந்த மணிகள் பெற்று சூரியன் போன் ஒளிரவேண்டும் ஒலிக்கவேண்டும் (டாண் ....டாண்)

சுவர் இருந்தாற்தான் சித்திரம் வரையலாம் சிறப்பாக இந்த ஆசிரியத்தெய்வங்கள் சகல சௌபாக்கியங்களும். ஐஸ்வரியங்களும் பெற்று மனநிறைவுடன் கற்பித்தலிலும் பதிற் கடமைகளிலும் மனம் சலியாமல் ஈடுபட வேண்டுமென மொழிந்து விடைபெறுகின்றேன்.

நன்றிகளை இணுவில் இந்து பாடசாலை சமூகத்திற்கு கூறி திருப்தியும் ஆனந்தமும் அடைபவர்கள் நன்றியறிதல் தெரிவிப்பதன் பக்குவத்தை மனப்பாங்கை எனக்கு வித்திட்டவர்கள் எனது சற்குருமார்களான

**திரு.வி.சிவஞானபோதன் (ஓய்வு நிலை அதிபர் - யா/ வட்டு மத்திய கல்லூரி)**
**திரு. குமாரசாமி சண்முகநாதன் (ஓய்வு நிலை அதிபர் - யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி)**
**திருமதி கலைச்செல்வி ஜெயதாஸ் (ஓய்வு நிலை ஆசிரியர்)**
**முன்னாள் ஆசிரியை**
**யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**
**யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**


**செல்வி பிரசாந்தி ஜெயறா**
**தரம் 9 B மாணவி**
**யா / கொக்குவில் இந்துக் கல்லூரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை கடினமானது.
தொடுகையில் உடையும்
ஒரு குமிழியைப் போல
அது உடையாது.
- ஒலிவர்
வெண்டெல்

புதன்
பொய்கை

18.09.2024
புதன்கிழமை



# பிராந்தியத்தில் பலமிழக்கிறதா பாரதம்?

■ ய.தர்ஷா

நவீன உலகில் எந்தவொரு நாடும் தனித்து இயங்கமுடியாது. தேசிய நலன், பொருளாதாரச் சுழற்சி, அரசியல் இருப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டுடன் ஏதோவொரு வகையில் தொடர்பைக் கொண்டிருக்கும். இந்தத் தொடர்புகளைப் பேணுவதற்காக வரித்துக்கொள்ளும் கொள்கை வெளிவிவகாரக் கொள்கை என்று அழைக்கப்படுகின்றது. தெற்காசியப் பிராந்தியத்தின் இருதய நிலமாக விளங்குகின்ற இந்தியா தனது வெளிவிவகாரக் கொள்கையை எவ்வாறு வரித்துக்கொண்டுள்ளது. எவ்வாறான கொள்கைகளைப் பின்பற்றுகின்றது என்பது தொடர்பில் ஆராய்கின்றது இந்தக் கட்டுரை.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளாகப் பல காணப்பட்டாலும் 'அயல் நாடுகளுக்கு முன்னுரிமை' என்பதே பிரதானமானது. இன்று நேற்றல்ல கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இந்தக் கொள்கையை இந்தியா பின்பற்றுகின்றது. அது தற்போதைய பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியிலும் தொடர்கின்றது. எனினும், இந்தக் கொள்கையால் கடந்த காலங்களில் பிராந்தியத்தில் செலுத்திய ஆதிக்கத்தை இந்தியாவால் தற்போதும் செலுத்த முடிகின்றதா? என்ற வினாவுக்கான பதில்களைத் தேட வேண்டியிருக்கின்றது.

சமகாலத்தில் அண்டை நாடுகள் பல இந்தியாவிடம் இருந்து விலகிச் செல்லும் நிலைப்பாடே அதிகம் காணப்படுகின்றது. பிரதமர் நரேந்திர மோதி நேபாளம், இலங்கை மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட முதல் பயணத்தின்போது அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இத்தகைய நிலைப்பாடு சம காலத்தில் மாற்றமடைந்துள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா உதவிகளை வழங்கியிருந்தாலும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் சீனாவுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. நேபாளத்துடன் கொண்டிருந்த உறவுநிலை கே.பி.சர்மா ஒலியின் ஆட்சியுடன் தளர்வு கண்டுள்ளது. மாலைதீவு நாட்டின் அதிபர் முகமது மொய்சு தன் நாட்டில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினரை முற்றாக வெளியேற்றியதுடன், சீனச் சார்பாளராகச் செயற்பட்டுக் கொண்டிருகின்றார். பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவின் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர் அங்கு இந்தியாவுக்குக் கடும் எதிர்ப்பலை தோற்றம் பெற்றுள்ளது. ஏனைய தெற்காசிய நாடுகளும்கூட 'தாமரை மேல் நீர்த்துளிபோல் தான்' இந்தியாவுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## காரணம் என்ன?

இந்தியா 'அயல் நாடுகளுக்கு முன்னுரிமை' என்று பேச்சளவில் சொன்னாலும், செயற்பாட்டில் அந்த உறவு நிலை ஆழம்பெறவில்லை என்பதையே இந்த விரிசல்கள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் தெற்காசியப் பிராந்தியத்தில் அதிகரிக்கும் சீன ஆதிக்கமும் இந்தியாவுக்கு இடியப்பச் சிக்கல்களையே தோற்றுவித்துள்ளது. தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கத்தினைக் கட்டுப்படுத்துதல், சர்வதேச அரசியலில் இந்தியாவின் வளர்ச்சி நிலையினைக் கட்டுப்படுத்துதல், இந்தியாவுக்கும் அண்டை நாடுகளுக்கும் முரண்பட்ட நிலைப்பாட்டினை தோற்றுவித்தல் என்ற நோக்கத்தின் அடிப்படையில் சீனா தனது 'எழுதப்படாத' வெளியுறவுக் கொள்கையினை முன்னெடுத்து வருகின்றது. சீனாவின் இந்தப் போக்கு இந்தியாவின் 'அயல் நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற கொள்கைக்கு அர்த்தம் காண்பதைச் சிக்கலாக்கியிருக்கின்றது.


இந்தியாவின் அண்டைய நாடுகளில் ஆட்சிபுரியும் சமகால அரசியல் தலைவர்கள் பலர் இந்தியாவின் எதிர்ப்பாளராக காணப்படுகின்றமையும் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகள் தோல்வியடையப் பிரதான காரணமாக உள்ளன. நேபாளம், ஆப்கானிஸ்தான், மாலைதீவு மற்றும் வங்கதேசம் என நான்கு நாடுகளில் இந்திய எதிர்ப்பு அரசாங்கங்கள் ஒரே நேரத்தில் ஆட்சிக்கு வந்துள்ளன.

வங்கதேசத்தின் புதிய இடைக்கால அரசின் தலைவராக முகமது யூனுஸ் பொறுப்பேற்றுள்ளார். இவர் ஷேக் ஹசினாவின் ஆட்சியினை எதிர்த்தவர்களில் முதன்மையானவர். அதேபோன்று மாலைதீவில் ஆட்சியாளராக இருப்பவர் மொகமட் மொய்சு. இவர் தனது தேர்தல் பரப்புரைகளையே இந்திய எதிர்ப்புச் சிந்தனைகளை வைத்துத்தான் கட்டமைத்திருந்தார். ஆப்கானிஸ்தான், நேபாளம் போன்ற நாடுகளிலும் இதேநிலைதான் காணப்படுகின்றது.

இந்தியாவின் பொருளாதார நிலைப்பாடும் வெளிவிவகாரக் கொள்கையை தீர்மானிக்கும் காரணியாக அமைந்துள்ளது. அண்டை நாடுகள் இந்தியாவினை விட்டு விலகிச் செல்வதற்கு இந்தியாவின் பொருளாதார நிலைப்பாடு பிரதான காரணியாக காணப்படுகிறது. அண்டை நாடுகள் இந்தியாவுடன் கலாசார ரீதியாகவோ அல்லது புவியியல் ரீதியாகவோ எவ்வளவு நெருக்கமாக இருந்தாலும், பொருளாதாரத் தேவை காரணமாக அவை சீனாவின் செல்வாக்குக்கு உட்படுகின்றன. பொருளாதார ரீதியில் கடன்களை அதிகளவில் வழங்குவதற்கு சீனா வலுவான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. ஆனால் இந்தியாவின் நிலைப்பாடு அவ்வாறில்லை. உதாரணமாக மாலைதீவின் மீது மொத்தமாக மூன்று பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன் உள்ளது. அதில் 42 சதவீதம் சீனாவுக்கு திருப்பிச் செலுத்தவேண்டிய தொகை என்று உலக வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது. இதேபோன்று இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளையும் தான் வழங்கிய கடன்களால் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது சீனா.

## புதிதல்ல

ஆனால், அண்டை நாடுகள் இந்தியாவுடன் ஒரு நேரத்தில் நெருக்கமாகவும் பின்னர் விலகியும் இருப்பது புதிதல்ல. முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தனது ஆட்சிக் காலத்தில், 'அனைத்தையும் மாற்றலாம் ஆனால் அண்டை நாடுகளை மாற்றமுடியாது' எனக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் காலத்துக்கு காலம் அண்டைய நாடுகள் தமது தேவைகளின் நிமித்தம் இந்தியாவுடன் நெருக்கமான உறவினையும் பின்பு விலகிச் செல்லும் நிலைப்பாட்டையும் கொண்டுள்ளன என்பதே தெளிவாகின்றது.





தெற்காசியப் பிராந்தியத்தில் அதிகரிக்கும் சீன ஆதிக்கமும் இந்தியாவுக்கு இடியப்பச் சிக்கல்களையே தோற்றுவித்துள்ளது. தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கத்தினைக் கட்டுப்படுத்துதல், சர்வதேச அரசியலில் இந்தியாவின் வளர்ச்சி நிலையினைக் கட்டுப்படுத்துதல், இந்தியாவுக்கும் அண்டை நாடுகளுக்கும் முரண்பட்ட நிலைப்பாட்டினை தோற்றுவித்தல் என்ற நோக்கத்தின் அடிப்படையில் சீனா தனது 'எழுதப்படாத' வெளியுறவுக் கொள்கையினை முன்னெடுத்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் நீடித்த கல்வியும் இன்றைய சமூகமும்

சம்சுதீன் முகம்மட் அஜீர்,
2ஆம் வருட கல்வியியல் சிறப்பு கற்கை மாணவன்,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.



வியக்கத்தக்க விஞ்ஞானம் விண்ணையும், மண்ணையும், எம்மையும் சிறகடிக்கச் செய்யும் அளவிற்கு தொழில்நுட்பங்களும், தொடர்பாடல்களும் வளர்ச்சி அடைந்திருக்கும் 21ஆம் நூற்றாண்டிலே மனிதனது தேவைகளும், தேடல்களும் தேக்கமின்றி ஓடும் மலை நீர் ஊற்றைப் போல ஓடிக்கொண்டே இருக்கின்றன.

கருவிலிருந்து, மரணித்து மண்ணறையில் மடியும் வரை மனிதனானவன் காலத்தின் சூற்சுமங்களைத் தாண்டி புதியனவற்றைப் புரிந்து, தேவையானவற்றைத் தெரிந்து, அறிந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டியுள்ளான். இதனால் தான் 'ஔவையார் கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்றார். இந்தத் தேவையின் தேடலிலே தான் கல்வி என்பது மனித சமூகத்துக்குத் தேவையான ஒன்றாக அமைகிறது.

கல்வி என்பது மனிதனின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கை மேம்படுத்தும் சக்தியாகும். இது உலகின் எல்லா சமுதாயங்களிலும் ஒரு பிரதான பங்கு வகிக்கின்றதை நாம் காணலாம். வாழ்நாள் நீடித்த கல்வி என்பது பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் மட்டும் பெற்றுக் கொள்ளும் ஒன்றல்ல. அது வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் தொடர்ந்தும் இடம் பெறவேண்டும் என்பதே எம்முடைய அவாவாக இருக்கிறது. அது ஓர் ஒப்பற்ற பயணம். மெல்லிசையான காற்றில் கிடைக்கும் சந்தோசம்போல அறிவு, அனுபவங்கள் அதில் எமக்குக் கிடைக்கக்கூடும்;. வாழ்நாள் முழுவதும் கல்வியைத் தொடர்வதன் மூலம் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பரிணாமத்திலும் உன்னதம் காணமுடியும். முதன் முதலில் கல்வி என்பது குடும்பத்தில் இருந்து பெரியோர்கள் சிறார்களுக்கு தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் தொடங்குகிறது. பிள்ளையின் முதல் பாடம் பாடசாலையில் ஆரம்பிக்கிறது. பாடசாலை என்பது ஒரு புதுமையான பூமி. அறிவின் விதைகள் இங்கு விதைக்கப்பட்டு குழந்தையின் மனதில் ஆழமாக உரமூட்டப்படுகிறது. பாடசாலையில்; நண்பர்கள், ஆசிரியர்கள், பாடங்கள் அனைத்தும் ஒளிரும் விண்மீன்கள் போல நம் மனதில் பதிந்து விடுகின்றன. அந்த முதல் கல்வியின் தொடக்கம் நம் வாழ்வின் முதற் கல். அதுவே நாம் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் உறுதியாக நிற்கின்றது.

நாம் பாடசாலையை விட்டுப் புறப்பட்டவுடன் வாழ்க்கை எனும் பாடசாலை நம்மை வரவேற்கிறது. காலத்தின் கற்றல் அனுபவம் அத்தனையும் மகத்தானது. ஒவ்வொரு தருணமும், ஒவ்வொரு நாளும், நமக்குத் தெரிந்திருக்காத புதிய பாடங்களை கற்றுக் கொடுக்கிறது. இந்தக் கற்றல் அனுபவம் நம்மை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளவும் உதவுகிறது.

சமூகம் நம் வாழ்வின் மற்றொரு பாடசாலை. மக்களுடன் கலந்து, அவர்களின் அனுபவங்களை பகிர்ந்து, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வது அவசியமான ஒன்று. குடும்பம், சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும் அன்பு, ஒற்றுமை, நல்லொழுக்கம் ஆகியவை நம்மை நல்வழிக்குக் கொண்டு செல்கின்றன. இன்றைய நவீன உலகில் தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சி வாழ்க்கையில் நுழைந்து பல்வேறு வகையான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. செயற்கை நுண்ணறிவு, கணினி தொழில்நுட்பம், உலகமயமாக்கம் போன்றன தொடர்ந்தும் கற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு எம்மைத் தள்ளுகின்றன.

## வாழ்நாள் நீடித்த கல்வி

வாழ்நாள் முழுவதும் கற்றலின் முக்கியத்துவத்தை நாம் பார்க்கின்ற போது 21ஆம் நூற்றாண்டில் தொழிநுட்பம் மற்றும் பொருளாதாரம் முதல் சமூகக் கட்டமைப்புகள், உலகளாவிய தொடர்புகள் வரை வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் விரைவான மாற்றங்களால் வகைப்படுத்தப்படுகிறது. பாரம்பரியக் கல்வி முறைகள், பெரும்பாலும் முறையான, நேரக்கட்டுமான மற்றும் நிறுவனக் கற்றலையே வலியுறுத்துகின்றன. இந்த ஆற்றல்மிக்க சூழலில் செழிக்கத் தேவையான அறிவு மற்றும் திறன்; என்பன தனிநபர்களைச் சிந்தைப்படுத்துவதற்குப் போதுமானதாக இல்லை. தொடர்ச்சியான, தனிப்பட்ட, தொழில்சார் வளர்ச்சியின் கலாசாரத்தை ஊக்குவிப்பதன் மூலம் வாழ்நாள் முழுவதும் கற்றல் இந்த இடைவெளியை நிவர்த்தி செய்கிறது.

வாழ்நாள் முழுவதும் கற்பவர்கள் தம்மைத் தக்கவைத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும், செயலூக்கமுள்ளவர்களாகவும், புதிய சவால்களைச் சமாளிக்கும் திறன் கொண்டவர்களாகவும் கருதப்படுகின்றனர். இதன் மூலம் சிறந்த வேலை வாய்ப்புகள், பதவி உயர்வுகள், தொழில் மாற்றங்களுக்கு வழிவகுக்கும். மேலும், தகவல் தொடர்பு, சிக்கலைத் தீர்ப்பது, விமர்சன சிந்தனை போன்ற மென் திறன்களின் வளர்ச்சி, தொழில் வெற்றிக்கு ஒருங்கிணைந்தது ஆகும். இதனை வாழ்நாள் முழுவதும் கற்றல் மூலம் கணிசமாக மேம்படுத்தலாம். வாழ்நாள் நீடித்த கல்வி என்பது மனிதனின் ஆளுமை வளர்ச்சி, சமூக மேம்பாடு, தொழில் மேம்பாட்டுக்கு முக்கியமானது. வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் சிறந்த நிலையை அடைய, தொடர்ந்து கற்றுக்கொள்வது அவசியமானது.

சமூக ஒற்றுமை, சுறுசுறுப்பான குடியுரிமையை மேம்படுத்துவதில் வாழ்நாள் நீடித்த கல்வி முக்கியமான பங்கு வகிக்கிறது. மேலும் தகவலறிந்த மற்றும் படித்த மக்களை வளர்ப்பதன் மூலம் தனிநபர்களை ஜனநாயக செயல்முறைகளிலும்; சமூக நடவடிக்கைகளிலும் மிகவும் திறம்பட பங்கேற்க உதவுகிறது. இந்த அணுகுமுறை சமூகப் பிளவுகளைக் குறைத்து சமத்துவமான சமூகத்தின் வளர்ச்சியை ஆதரிக்கிறது.



வாழ்நாள் நீடித்த கல்வியானது இலங்கையில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. குடும்பப் பொறுப்புகள் மற்றும் வேலைச் சுமைகள் அதிகரித்த நிலையில் கல்வியைத் தொடர்வதில் மக்கள் பல தடைகளை எதிர்கொள்கின்றனர். இருப்பினும், இணையவழிக் கல்வி, முதியோர் கல்வி, தொலைக் கல்வி போன்ற முன்னோக்குச் செயன்முறைகள் எம்மை இடைவிடாமல் கற்றுக் கொள்வதற்கான வழிகளை உருவாக்குகின்றன.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் நிதி உதவிகள், குறைந்த வட்டிக் கடன்கள் மூலம் பொருளாதார தடைகளைத் தாண்டி வாழ்நாள் நீடித்த கல்வியைப் பெற உதவுகின்றன. இத்துடன், தொழில்நுட்ப வளர்ச்சி, குடும்பம் மற்றும் சமூகத்தின் உற்சாகம், ஊக்குவிப்பு ஆகியவை மக்கள் தமது அறிவு, திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை விரிவாக்குகின்றன.

இவ்வாறாக, வாழ்நாள் நீடித்த கல்வி இலங்கையில் ஒரு புதிய மாற்றத்தின் விதையை நட்டி, ஒவ்வொரு நபரின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கிறது. நடமாடும் வாழ்க்கையில், வாழ்நாள் முழுவதும் கல்வியை தொடர்வதில் சில சவால்கள் இருக்கும். அவற்றில் சில முக்கியமான சவால்களையும்; அவற்றுக்கான தீர்வுகளையும் நோக்க வேண்டியுள்ளது.

## நேரத்தின் மகிமை

இன்று உலகில் நமக்கு இலவசமாகக் கிடைக்கும் விலை மதிப்பில்லா சொத்து நேரம் தான். ஆனால், மனித சமூகத்துக்கு அதன் அருமை தெரிவது கிடையாது. அதற்கான காரணம் எதுவாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்த்தால் குடும்பப் பொறுப்புகள், கடமைகள் மற்றும் வேலைச் சுமை போன்றவை நம் நேரத்தை முழுவதும் பிடித்துக் கொள்ளுகிறது என்கிறோம். ஒவ்வொரு மணி நேரத்தையும் திட்டமிட்டு பயன்படுத்தும் போது குறிப்பிட்ட நாள்களில் அல்லது நேரங்களில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடமுடியும்.

வாழ்நாள் நீடித்த கல்வி என்பது நம் வாழ்வின் ஒளிக்கதிர். அது நம்மை வெற்றியாளராக்கும் வழிகாட்டி, நம்மை மேம்படுத்தும் ஒரு கருவி. வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் கற்றலின் தேவையை உணர்ந்து அதை நம் வாழ்வின் நெறியாகக் கொண்டு உலகிற்கு ஒளியூட்டுவது மிக அவசியம். வாழ்நாள் நீடிக்கும் கல்வி, நம் வாழ்வின் ஒளியூட்டும் நதி. அதில் மிதந்து அறிவின் முத்துகளை எடுத்து நம் வாழ்வின் ஒளியைப் பரப்பி அதன் நன்மைகளைப் போற்றுவோம்.

கல்வி என்பது ஒருவரின் வாழ்நாளின் எல்லாக் கட்டங்களிலும் தொடர்ந்தும் நடைபெறவேண்டிய ஒரு செயல். இது நம் வாழ்க்கையை நம் சமூகத்தை மற்றும் உலகை மாற்றும் சக்தியாக விளங்குகிறது. எனவே, நாம் வாழ்நாள் முழுவதும் கல்வியை ஊக்குவிப்போம் வளர்ப்போம் உலகிற்கு அறிவுப் பெருக்கத்தை வழங்குவோம்.

> “வாழ்நாள் நீடித்த கல்வியானது இலங்கையில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. குடும்பப் பொறுப்புகள் மற்றும் வேலைச் சுமைகள் அதிகரித்த நிலையில் கல்வியைத் தொடர்வதில் மக்கள் பல தடைகளை எதிர்கொள்கின்றனர். இருப்பினும், இணையவழிக்கல்வி, முதியோர் கல்வி, தொலைக்கல்வி போன்ற முன்னோக்குச் செயன்முறைகள் எம்மை இடைவிடாமல் கற்றுக் கொள்வதற்கான வழிகளை உருவாக்குகின்றன.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.தனுஷ்கா,
*ஊடகக் கற்கைகள் துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

# ஆளப்போவது யார்?



இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தேர்தலுக்காக 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

## பலமுனைப்போட்டி

இந்த வருடத் தேர்தல் களமானது இலங்கை வரலாற்றில் அதிகளவிலான வேட்பாளர்கள் ஜனாதிபதிப் பதவிக்காக போட்டியிடும் தேர்தல்களமாக பார்க்கப்படுகின்றது. இதன்படி 1982ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவதாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது 6 வேட்பாளர்களும், 1988ஆம் ஆண்டு 3 வேட்பாளர்களும், 1994ஆம் ஆண்டு 6 வேட்பாளர்களும், 1999ஆம் ஆண்டு 13 வேட்பாளர்களும், 2005ஆம் ஆண்டு 22 வேட்பாளர்களும், 2019ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது 35 வேட்பாளர்களும் போட்டியிட்ட நிலையில் இந்த வருடம் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கைகளை விட அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இலங்கையில் 1981ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபா கட்டுப் பணமாகவும், சுயேட்சை வேட்பாளர்களுக்கு 75 ஆயிரம் ரூபா கட்டுப் பணமாகவும் அறவிடப்படுகின்றது. இந்த நிலையில் இரண்டு கோடியே 20 லட்சம் சனத்தொகையை கொண்ட எமது நாட்டில் 2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரம் ஒரு கோடி 71 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## முக்கியத்துவம் பெறும் விருப்பு வாக்குமுறை

ஜனாதிபதித் தேர்தல் நடைமுறைகளும் மக்களுக்குச் சற்று புதிய விடயமாகவே காணப்படுகின்றது. பிரதான வேட்பாளர்களில் ஒருவரும் 50 வீத வாக்குகளை தாண்டுவதற்கான வாய்ப்பில்லை என்பது தெரிகின்றது. அந்தவகையில் இவ்வருட ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு முறையானது விருப்பு வாக்களிப்பு முறைமையை அடிப்படையாகக் கொண்டே அமையப் பெறுகின்றது. பின்வரும் மூன்று வழிமுறைகளின் ஊடாக மக்கள் தமது விருப்பு வாக்குகளை அளிக்கமுடியும்.

வழிமுறை - 1 வாக்காளர் யாதேனும் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பின், அவரின் பெயருக்கு நேராக எதிரில் உள்ள சின்னத்துக்கு அருகில் உள்ள பெட்டியில் 1 என இலக்கமிடமுடியும்.

வழிமுறை - 2 இருவருக்கு வாக்களிக்க விரும்பின்,வாக்காளர் ஒருவர் தான் விரும்பிய வேட்பாளரின் பெயருக்கு நேரே எதிரில் உள்ள சின்னத்துக்கு அருகே உள்ள பெட்டியில் 1 எனவும் இன்னொருவருக்கு 2 எனவும் இலக்கமிட்டு இரண்டு வாக்காளர்களுக்கு வாக்களிக்கமுடியும்.

வழிமுறை - 3 மூன்று நபர்களுக்கு வாக்களிக்க விரும்பின்,வாக்காளர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே எதிரில் உள்ள சின்னத்துக்கு அருகில் உள்ள பெட்டியில் தனது விருப்பத் தெரிவுக்கு ஏற்ப விருப்பத்தின் அடிப்படையில் 1 எனவும் இன்னொருவருக்கு 2 எனவும் மற்றுமொருவருக்கு 3 எனவும் இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வாக்களிக்க முடியும். தேர்தலில் வாக்களிக்கும் போது வாக்காளர்கள் தெரிந்திருக்க வேண்டிய மிக முக்கியமான விடயமாக, தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களிக்க விரும்பினால் 1 என இலக்கமிடவும் முடியும். ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வாக்களிக்க விரும்பின் இலக்கங்களை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாக வேண்டும் எனின் செலுத்தப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்துடன் ஒரு வாக்கு அதிகம் பெற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு இல்லாவிடின், தேர்தல்கள் ஆணைக்குழு இரண்டாவது வாக்கெண்ணும் முறையினை பின்பற்றும்.

## ஜனநாயகக் கடமை

தபால் மூலமாக வாக்களிக்கும் வாக்காளர்களைத் தவிர்ந்த ஏனைய வாக்காளர்கள் செம்ரெம்பர் 21ஆம் திகதி தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் வகையில் வாக்களித்து அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான உரிமையுண்டு.

ஒரு தேசத்தின் தலைமைத்துவமே சிறந்த சமூகமாகும். சிறந்த அரசும் சிறந்த பிரஜைகளும் சிறந்த தேசத்துக்கு வழிவகுக்கும். எமது நாட்டில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பாரபட்சம் காட்டாது அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளக்கூடிய மக்களின் தேவைகளை அறிந்து செயற்படக்கூடிய ஒரு நபர் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. எமக்கு சரியான தலைவரை நாமே தெளிந்த சிந்தனையுடன் வாக்களித்து வெற்றி பெறச் செய்யவேண்டும். வாக்களிப்பது மக்களின் ஜனநாயகக் கடமையும் உரிமையுமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மிகவும் முக்கியமானதாகும். மிகவும் கடினமான காலகட்டத்தின் ஊடாக நாட்டை வழிநடத்தும் திறன் கொண்ட அரசியல் தெரிவை நாடு மேற்கொள்ளவேண்டும். கடந்த இரண்டு வருடங்களை விட எதிர்வரும் வருடங்கள் கடினமாக இருக்குமென பொருளாதார நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர். இப்பின்னணியில் வெறும் வார்த்தைகள் மற்றும் செயலற்ற வாக்குறுதிகளுக்கு அப்பால் பொதுமக்கள் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய தேர்தல்களில் ஒன்றாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காணப்படுகிறது. பலதரப்பட்ட சவால்களின் பின்னணியில் அமையவிருக்கும் புதிய நிர்வாகம், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம், நீண்டகால ஸ்திரத்தன்மை, செழுமைக்கான அடித்தளத்தை நிறுவும் அதேவேளையில் உடனடி பொருளாதாரக் கவலைகளுக்கு தீர்வு காண்பதற்கான பெரும் கடப்பாட்டையும் கொண்டிருக்கிறது. எனவே மக்கள் ஜனநாயகத்தின் ஆயுதமான வாக்குரிமையை பல்பரிமாண நோக்கு நிலையிலும் தூர நோக்குடனும் சிந்தித்து அனுபவம் வாய்ந்த தலைவருக்கு வாக்களிப்பது மிக அவசியமானது. எமக்கான தீர்வை நாமே தீர்மானிக்கக்கூடிய தருணம் இது.



> **“எமக்கு சரியான தலைவரை நாமே தெளிந்த சிந்தனையுடன் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். வாக்களிப்பது மக்களின் ஜனநாயகக் கடமையும் உரிமையுமாகும். இலங்கையைப் பொறுத்தவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மிகவும் முக்கியமானதாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3



# நவீன யுகத்தின் விதியை ஆழ்மனதின் உணர்வால் வெல்வோம்

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)
எழுத்தாளர்,
ஊக்குவிப்பு பயிற்சி பயிற்றுவிப்பாளர்,
சண்மூன் இன்ஸ்பிரேசன் நிறுவன இயக்குநர்.

ஆழ்மனம் என்றால் என்ன? அது ஏன் அவசியம்? என்று பல கேள்விகள் எம் மனதில் இழையோடுவது வழமையானதொன்றேயாகும். இதனைத் தெளிவுபடுத்தும் முகமாக எழுத்தாளர் என். கணேசன்: 'உயர் உணர்வு நிலை, ஒரு முனைப்படுத்தப்பட்ட மனது, எண்ணங்களில் கட்டுப்பாடு, மனதில் உருவகப்படுத்தி எதையும் தெளிவாக காணும் பழக்கம் ஆகிய அனைத்தும் ஆழ்மன சக்தியையடையத் தேவையான சக்தி வாய்ந்த உபகரணங்கள்' என அழகாகக் கூறியுள்ளார். நானாக இருந்தாலும் சரி, நீங்களாக இருந்தாலும் சரி செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் மனம் சொல்லும் கருத்துகளை கேட்டு செய்வது வழக்கமான விடயமே, ஆனால் அதை வெளியே அறிந்து கொள்ளமுடியுமா என்றால் இலகுவானது அல்ல, மாறாக உணர்வு மூலமாகவே அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது எனக் கூறலாம்.

ஒருவருடைய மனதில் ஆழ்மனம், வெளிமனம் என இரண்டு உள்ளது என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இருப்பினும் வெளி மனதை விட ஆழ்மனம்தான் அதிக செல்வாக்குப் பெற்று இருக்கின்றது என்று மனவியல் அறிஞர்கள் தங்கள் கருத்தை முன்வைக்கின்றனர். நாம் உண்ணும் உணவாக இருந்தாலும் சரி, உடுக்கும் உடையாக இருந்தாலும் சரி, செய்யும் செயலாக இருந்தாலும் சரி ஒவ்வொன்றுக்கும் அடிப்படைத் தூண்டுதலை வழங்குவது ஆழ்மனமேயாகும். வெளிமனம் நன்மையான எண்ணங்களை ஆழ்மனதிடம் விதைத்தால் அதன் வெளியீடு நன்மையாக அமையும். எவ்விதமான விடயத்தினை வெளிமனதின் உதவியுடன் ஆழ்மனதிற்கு கொண்டு செல்லவேண்டும் என்பதை நாம் கவனமாக தீர்மானிக்கவேண்டும். இவற்றிலிருந்து: எம்முடைய ஒட்டுமொத்த இயக்கமும் ஆழ்மனது என்பதை விளங்கியிருப்பீர்கள்.

'இன்றைய உலகில் ஆழ்ந்த சிந்தனை என்பது பழங்கதையாகிவிட்டது' என்று ராபின் சர்மா கூறுகின்றார். நாம் அனைவருமே எங்கள் ஆழ்மனதினை பெரும்பாலும் அலைபாயவிடுகின்றோம். நம் ஆழ்மனமும் நல்ல விடயங்களை காது கொடுத்து கேட்காமல் மறுப்பதே எம் தோல்விகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. நாம் ஏதேனும் செயல்களையோ, இலட்சியங்களையோ ஆழ்மனதின் உதவியுடன் தொடங்கத்திட்டமிடுவது வழமை. இதனை ஏனையவருடன் பகிர்வதையும் அவர்கள் இது பயனற்றது என்று கூறிவிட்டால் எவ்வளவு பெரிய விடயமாக இருந்தாலும் சரி அதனை பாதியில் இடைநிறுத்தி விடுகின்றோம். இதனால்தான் பலர் வெற்றியின் விளிம்பிற்கு எவ்வளவோ போராட்டங்களில் மத்தியில் சென்றும் இறுதியில் வெற்றிக்கனியை ருசி பார்க்கத் தவறிவிடுகின்றோம். இதனை பல முயற்சிகளில் கண்கூடாக பார்க்கின்றோம். இதனாலே பலர் தங்கள் சுயத்தை வெறுத்து ஒதுக்குகின்ற நிலைக்கும் ஆளாகின்றனர். நாம் ஒரு வாகனத்தில் பயணம் செய்யும்போது சமிக்ஞை அதிக கவனம் கொள்ளவேண்டும். சிவப்பு விளக்கு எரியும் போது எவ்வளவு அவசர தேவையாக இருந்தாலும் சரி வாகனத்தை நிறுத்தவேண்டும். மாறாக சென்றால் விளைவு பயங்கரமானதாகும் என்பது அறிந்ததே. மஞ்சள் எரியும்போது தயார் நிலைக்கு வருவதுடன், பச்சை விளக்கு மீண்டும் எரியும் போது பயணத்தை தொடங்குவது வழமை. தூரப் பயணங்களில் இவ்வாறு காணப்படும்போது, வாழ்க்கையிலும் நெடுதூரப் பயணத்தில் பயணிக்கும் பயணிகளாகிய நாம் சமிக்ஞை விளக்கு எனும் ஆழ்மனதின் சமிக்ஞைகளை முறையாகப் பேணாமல் எப்படிப் பயணிக்க முடியும்? நாம் தினமும் நல்ல சிந்தனைகளையும் செயல்களையும் ஆழ்மனதிற்கு விதைக்க வேண்டும். இப்படி எமது நேரத்தை ஆழ்மனதுடன் செலவழித்து நேரான சிந்தனைகளை உள்ளீடாக வழங்குவோமானால், வெளியீடாக கிடைக்கும் எமது வெற்றியை எவராலும் தட்டிப் பறிக்கமுடியாது. இன்றைய நாள் மிகவும் மகிழ்ச்சியான நாளாக இருக்கின்றது, இன்று நல்ல செய்திகள் என்னை நோக்கி வருகின்றன, இன்று நான் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றியளிக்கின்றன, நல்ல மனிதர்களை நான் சம்பாதித்து கொண்டிருக்கின்றேன் போன்ற பிரார்த்தனைகளை விதைத்து, உங்கள் சிந்தனைக்கு ஏற்ப செழுமையாக ஆழ்மனதை இயங்கு நிலையில் வைத்திருந்து, வெற்றுக்கனியை அனுபவித்திடுங்கள்.

(தொடரும்)



சு.திலேஜா,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

## சில்றன்ஸ் ஆப் ஹெவின்

# ஈரானிய சினிமாவின் இணையற்ற படைப்பு

சில்றன்ஸ் ஆப் ஹெவின் எனும் திரைப்படமானது மஜித் மஜிதியின் இயக்கத்தில் 1997ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஈரானில் வெளிவந்த பாரசீக மொழித் திரைப்படமாகும். இந்தத் திரைப்படம் சிறந்த வெளிநாட்டு மொழித் திரைப்படத்திற்கான அகடமி விருதைப் பெற்றது. இதில் பிரதானமாக நான்கு கதாபாத்திரங்கள் காணப்படுகின்றன. அலி (அமீர் பராக் ஹாஷிமியன்), சாரா (பவார் செட்டிகி), அப்பா (ராசா நாஜி), அம்மா (பெரஷ்டே சரபந்தி) ஆகியோர் நடிக்கின்றனர் மஜித் மஜிதியின் உன்னத படைப்புகளுள் ஒன்றாகக் காணப்படும். இந்தத் திரைப்படத்தின் திரைக்கதையானது ஈரானில் வாழ்கின்ற வறியநிலைக் குடும்பச் சிறுவர்களை மையப்படுத்தியதாக அமைகின்றது. ஒரு ஜோடி சப்பாத்தை வைத்து இயக்குநர் படத்தை மிக இலகுவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

ஈரானின் தெற்கு தெஹ்ரோனுக்கு அருகில் வாழும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அண்ணன் (அலி), தங்கை சாராவினுடைய சப்பாத்துகளை தொலைந்து விடுகிறான். சப்பாத்து இல்லாமல் பாடசாலை செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. அடுத்ததாக என்ன செய்வது என யோசிக்கத் தொடங்குகிறார்கள். இறுதியில் இருவருமாக ஒரு முடிவிற்கு வருகிறார்கள். சாரா பாடசாலைக்கு சப்பாத்தை போட்டுக்கொண்டு சென்றுவிட்டு திரும்பி வந்து அலியிடம் கொடுப்பார். கால ஓட்டத்தில் இவ் ஏழைக் குழந்தைகளால் இந்தப் பிரச்சினையை சமாளிக்கமுடியவில்லை. எப்படியாவது சாராவிற்கு சப்பாத்து வாங்கிக் கொடுக்கவேண்டும் என்ற ஆசை ஏற்படுகின்றது. இதற்காக அலி ஓர் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்கிறான். அதில் மூன்றாவதாக வர வேண்டும் என்பது அவனுடைய ஆசை. ஏனெனில் மூன்றாவதாக வருபவருக்கு சப்பாத்தே பரிசாக கிடைக்கும் என்பதற்காக ஆகும். இதுவே இப்படத்தின் கதைச் சுருக்கமாகும்.

இந்தத் திரைப்படத்தில் தம்புரா வாத்தியத்தை காட்சிகளுக்கு ஆதாரமாகவும் சுருதியாகவும் இசையமைப்பாளர் கெய்ரன் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். இதில் வருகின்ற காட்சிகள், கிராமத்தின் சூழல், வீட்டின் அமைப்பு, தாயின் நோய்வாய்ப்பட்ட நிலை என்பவற்றின் மூலம் அவர்களுடைய வறுமையை எடுத்துக்காட்டியுள்ளார்கள். இந்தத் திரைப்படத்தில் நெஞ்சைத் தொடும் விறுவிறுப்பான கட்டமாக, சாரா அலிக்கு சப்பாத்தை கொடுப்பதற்காக அவசரம் அவசரமாக ஓடும் போது காலிற்கு அளவில்லாத அந்தச் சப்பாத்தில் ஒன்று கால்வாயில் விழுகிறது. கால்வாயில் ஓடும் கழிவுநீரில் சப்பாத்திற்கு பின்னால் சாராவும் ஓடுவது அவளினுடைய வறுமையையும் இயலாமையும் எடுத்துக்காட்டுவதாக இயக்குநர் காட்சியை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அலி ஓட்டப் போட்டியில் ஓடும் பொழுது சாராவினுடைய நினைவுகள், அவசரமாக சப்பாத்தை கொண்டு ஓடிவருகின்ற நினைவு, சப்பாத்துப் பற்றி இடம்பெற்ற இருவருக்குமான உரையாடல் என்பவற்றை அவனது மனக் காட்சிகளிலே தோன்றுவதும், இதனை நினைவில் கொண்டு வேகமாக ஓடுவதும், இடையிலே சாராவினுடைய கால்களையும் அலியினுடைய கால்களையும் எடுத்துக் காட்டும் காட்சி படத்தொகுப்புக்கு சிறப்பாக அமைந்திருந்தது. படத்தினுடைய முக்கியமான குறியீடு சப்பாத்து ஆகும். இதன் மூலம் அவர்களுடைய அன்பும் ஒற்றுமையும் எடுத்துக்காட்டப்படுகிறது. வறுமைக்குட்பட்ட மக்களுக்கு வாழ்வில் அத்தனையும் துயரம் என்கின்ற போது அவர்கள் வாழ்வில் மிகச் சிறிய ஒரு பொருளைத் தொலைத்தாலும் அதனைப் பெறுவதற்கு எப்படி எல்லாம் துயரப்படுகிறார்கள். அதனை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு எத்தனை நாள்கள் எடுக்கின்றன. இதனால் எவ்வளவு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர் என்பதை திரைப்படத்தின் சாரா, அலி என்ற இரண்டு பாத்திரங்களுக்கூடாக சிறப்பாகவே எடுத்துக் காட்டப்படுகின்றது. அலி, சாரா ஆகியோருடைய நடிப்பானது பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கக் கூடிய யதார்த்தமான முகபாவம் கொண்டதாக காணப்படுகிறது.

இதயத்தை தொட்டுச் செல்லும் குடும்ப அன்பின் தன்மையும், ஏழைக் குழந்தைகளின் குடும்பக் கஷ்டத்தினையும், எவ்வளவு துன்பத்திலும் கல்வியில் சிறந்து விளங்குவதும் இச் சமூகத்தில் வாழும் சிறுவர்களுக்கும் எடுத்துக் காட்டாக அமையும். இத் திரைப்படம் ஈரானில் தேசிய விருதுகளையும் ஆசிய விருதுகளையும் பெற்றது. எளிமையான கதையமைத்து அற்புதமான முறையில் திரைக்கதையை சில்றன்ஸ் ஆப் ஹெவின் படத்தின் மூலம் மஜித் வெளிப்படுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்துக்கான எழுச்சியுடன் தமிழர்கள் பயணிக்கவேண்டும்

## யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 15 பேர் கையொப்பமிட்டு அறிக்கை

தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் தென்னிலங்கையில் மாற்றத்துக்காக எழுச்சி பெற்றிருக்கும் மக்களுடன் இந்தத் தேர்தலிலே பயணிப்பது குறித்து ஆராயவேண்டும். அதேநேரம் நாட்டைக் கடந்த ஐந்து ஆண்டுகளிலே மோசமான நிலைக்குத் தள்ளியோரைத் தோற்கடிப்பதும் அவசியம். இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே கற்பிக்கும் 15 விரிவுரையாளர்கள் இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய அரசியல்வாதிகளிலே பலர் தொடர்ந்தும் அமைச்சர்களாக இருக்கிறார்கள். ஊழலிலே ஈடுபட்டு நாட்டின் வளங்களையும் செல்வத்தையும் கொள்ளையிட்டவர்கள் இன்றும் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய ஆட்சியாளர்கள் மிகவும் மோசமான முறையில் இந்த நாட்டைக் கடந்த ஐந்து ஆண்டுகளிலே ஆட்சி செய்திருக்கிறார்கள். மக்கள் இந்த நிலைமைகளினால் மிகவும் அதிருப்தியுற்றிருக்கிறார்கள்.

இவ்வாறானதொரு நிலையிலேயே 2022 இல் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் மையமாக இருந்த 'கட்டமைப்பு மாற்றம் வேண்டும்' என்ற கோசம் தற்போதைய தேர்தற் காலத்திலே நாட்டிலே, குறிப்பாகத் தென்னிலங்கையிலே, ஓங்கி ஒலிப்பதனை நாம் ஒவ்வொரு நாளும் காண்கிறோம். போராட்டத்தின் மூலம் ஏற்படாத மாற்றங்களைத் தேர்தலின் மூலமாவது ஏற்படுத்தவேண்டும் என்பதிலே தெற்கில் இருக்கும் மக்கள் ஆர்வமாக இருப்பதனை உணரக் கூடியதாக உள்ளது.

இவ்வாறானதொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலை வடக்குக் கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழும் சிறுபான்மை மக்கள் கவனமாகவும், புத்திசாலித்தனத்துடனும் கையாள வேண்டியது அவசியம். தென்னிலங்கையிலே பல தசாப்தங்களுக்குப் பின்னர் இனவாதத்தை முன்னிறுத்தாத தேர்தல் பரப்புரைகளை பிரதான வேட்பாளர்கள் முன்னெடுப்பதாக நாம் அறிகிறோம். மக்களின் நலனை முன்னிறுத்தும் பொருளாதார ரீதியான மாற்றங்கள், ஆட்சி முறையில் மாற்றம், ஊழல் ஒழிப்புப் போன்ற கோசங்களை முன்வைக்கும் வேட்பாளர்களின் பின்னால் தென்னிலங்கை மக்கள் பெருமளவிலே திரளுவதனை நாம் காண்கிறோம்.

இனப்பிரச்சினைத் தீர்வு, மதச்சார்பற்ற அரசை உருவாக்குதல், போர்க்குற்றங்களை விசாரித்தல் போன்ற விடயங்களிலே பிரதானமான வேட்பாளர்கள் முற்போக்கான நிலைப்பாடுகளை எடுக்காமை குறித்து நாம் சுட்டிக்காட்ட வேண்டிய அதேவேளை, பொருளாதார நெருக்கடியும், ஊழலினால் ஏற்படும் பொருளாதார, அரசியற் சீர்கேடுகளும் சிறுபான்மை சமூகங்களையும் மோசமாகப் பாதித்துள்ளன என்பது குறித்து நாம் விழிப்புணர்வுடன் இந்தத் தேர்தலிலே செயலாற்றுவது அவசியம்.

நாம் எமது ஜனாதிபதித் தெரிவை மேற்கொள்ளுகையிலே தனியே இனப்பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வுகளுக்குள் மாத்திரம் குறுக்கிவிடாது, நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் பொருளாதார சூழ்நிலை குறித்தும் பகுத்து ஆராய்வது அவசியம். அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இருந்து எம்மை நாமே புறமொதுக்காது இருப்பதனை உறுதி செய்யலாம். நாம் தனிமைப்படுத்தப்படாது, எமது அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களைத் தென்னிலங்கை மக்களுடன் சேர்ந்து எதிர்காலத்திலே வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவது குறித்து இந்தத் தேர்தற் காலத்திலே சிந்திக்கவேண்டும்.

இந்த அடிப்படையிலே தற்போதைய ஆட்சியாளர்களை நிராகரித்து, முற்போக்கானதும், ஊழலுக்கு எதிரானதும், நாட்டினதும் மக்களினதும் பொருளாதார மீட்சியிலே அக்கறை கொண்டதும், 2022 இல் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது எழுச்சியுற்ற முற்போக்கான அரசியற் பொருளாதார மாற்றங்களுக்கான கோசங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கக் கூடியதும், நம்பகத்தன்மை மிக்கதும், சட்டத்தின் ஆட்சியையும், நீதித் துறையின் சுதந்திரத்தையும் உறுதி செய்யக் கூடியதும், இனங்களை ஒற்றுமைப்படுத்தக்கூடியதுமான ஒரு எதிர்காலத்தை நோக்கி தமிழ் மக்களும், ஏனைய சிறுபான்மை மக்களும் வாக்களிப்பது பொருத்தமாக இருக்கும் என நாம் கருதுகிறோம். இதன் மூலம் சுதந்திரத்துக்கும், சமத்துவத்துக்குமான கதவுகளை படிப்படியாகவேனும் எம்மால் திறக்க முடியும் - என்றுள்ளது. (அ-ஒ-இ)



ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்ட தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று தொடங்கஸ்லந்தவில் இடம்பெற்றது. இதில் பங்கேற்ற பொதுமக்களை படத்தில் காணலாம். (ஒ-இ)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் மன்னாரில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட மக்களைப் படத்தில் காணலாம். (ஒ-இ)



ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஹெட்டிபொல நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதுபோது அதில் கலந்து கொண்ட அவரது ஆதரவாளர்கள். (ஒ-இ)

# திருகோணமலையில் விகாரைகள் அமைக்க சஜித் பிரேமதாஸவே முன்மொழிந்தார்

## ஸ்ரீகாந்தா தெரிவிப்பு!

திருகோணமலை, செப் . 18

திருகோணமலை, குச்சவெளி பகுதியில் சுமார் 26 விகாரைகளை அமைப்பதற்கான திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவே முன்மொழிந்துள்ளார் என மூத்த சட்டத்தரணியான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பொதுகட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து யாழ். ஊர்காவற்துறை பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "தமிழ் மக்களுக்காக சஜித் பிரேமதாஸ ஒருபோதும் குரல் எழுப்பியதில்லை. ஆனால், ஒரு மந்திரியாக அவர், 1000 விகாரைகள் அமைக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

தமிழ் மண்ணில் 2009ஆம் ஆண்டுக்கு பிறகு நூற்றுக்கணக்கான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. குச்சவெளியில், 26 விகாரைகளுக்காக சுமார் 3,887 ஏக்கர் நிலம், அதாவது ஒரு விகாரைக்கு கிட்டத்தட்ட 150 ஏக்கர் என்ற வகையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை, இவ்வாறான ஒரு கருத்தை விதைத்தது சஜித் பிரேமதாஸ ஆகும்" என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-22-27)

# பொதுவேட்பாளரை ஆதரித்து யாழில் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.18

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், பொதுவேட்பாளராகப் போட்டியிடவுள்ள பா.அரியநேத்திரனை ஆதரித்து பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தமிழ்த்தேசியப் பசுமை எழுச்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மூத்தபோராளி மு.மனோகர் (காக்காண்ணை) , சமூக, அரசியல் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், அரசியல் ஆய்வாளர் மு.நிலாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-25-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல் முகவர்களுடன் யாழில் கலந்துரையாடல்

கொழும்பு, செப். 18

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத் தேர்தல்கள் உதவி ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் பங்குபற்றியதுடன் வேட்பாளர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களும் கலந்து கொண்டனர்.

போட்டியிடும் வேட்பாளர்களில் 19 வேட்பாளர்களே இதுவரை அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமித்துள்ளனர். யாழ். மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களுக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்படவுள்ள 41 வாக்கெண்ணும் நிலையங்களுக்கும், 14 அஞ்சல் வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் மற்றும் பெறுபேறு தயாரித்து வெளியிடும் நிலையத்துக்கும் வேட்பாளர்களின் முகவர்களை உரிய எண்ணிக்கையில் சரியான பொறிமுறையூடாகச் சட்டத்தின் வழி நியமித்து நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-66)

## 19 வேட்பாளர்கள் எங்கே?

கொழும்பு, செப்.18

ஜனாதிபதி வேட்பாளர்கள் 19 பேர் இதுவரை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரசாரங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட 38 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில் தற்போது பத்து வேட்பாளர்கள் மாத்திரமே தமது கொள்கைகளை முன்வைத்து பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சில வேட்பாளர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன. (ச)

### மன்னார் மாவட்டத்தில்

# 90,607 வாக்காளர் வாக்களிக்கத் தகுதி!

**மன்னார், செப். 18**

**எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது வன்னி தேர்தல் தொகுதிக்கான மன்னார் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது இம்முறை மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

- இவ்வாறு மன்னார் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்டச் செயலருமான கனகசபாபதி கனகேஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,, மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமாக மன்னார் மாவட்டச் செயலகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்குள் 7 வாக்கு எண்ணும் நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும். மன்னார் மாவட்டத்தில் 20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்து முறைப்பாடுகள் அனைத்தும் வன்முறையுடன் தொடர்புபட்டதாக இல்லை.

மேலும் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் இடம்பெற்றுவருகிறது. தேர்தல் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவு இலக்கமான 023 2222215 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் - என்றார். (ச-56)

# சட்டவிரோதமாக மரங்கள் அழிப்பு

### பூநகரி மக்கள் விசனம்

கிளிநொச்சி, செப். 18

கிளிநொச்சி, பூநகரி நல்லூர்க் கிராம அலுவலர் பிரிவிலுள்ள தியாகம் வெளியில் தனிநபரொருவரால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்களை வெட்டி வேலி அமைக்கப்படுகிறது. இது சட்டத்துக்குப் புறம்பான செயலாகும் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பூநகரிப் பிரதேச செயலகப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் மரங்களை வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக காய்ந்த விறகுகளைக் கூட பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து எடுத்துச் செல்ல முடியாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரதேசம் உவரடைந்து வருவதன் காரணமாக மரங்கள் அழிக்கப்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் தியாகம் வெளியைச் சேர்ந்த தனி நபரொருவர் பச்சை மரங்களை வெட்டி வேலி உருவாக்கியுள்ளார். அவர் மரங்களை வெட்டுவதற்கு அனுமதித்தது யார்? இதுதொடர்பில் பூநகரி பிரதேச செயலாளர் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-13)

# சர்வதேச மதிப்புமிக்க தலைவர் ரணிலே!

### ஐ.தே.க. உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 17

சர்வதேச நாடுகளினால் மதிப்புமிக்க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே வீழ்ச்சி பெற்ற நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட தொகுதி அமைப்பாளர் மருத்துவர் எஸ். விஜயராஜன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய விட்டுச் சென்றபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ பொறுப்பெடுக்க முன்வரவில்லை. சர்வதேசத்தின் நன் மதிப்பைப் பெற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே சர்வதேச இராஜதந்திரிகளை இலகுவாகக் கையாளமுடியும். நாட்டை ஆளக்கூடிய இனக்குரோதமற்ற தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் திறமைக்கு மக்கள் தமது வாக்குகளினால் சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-20)

# பெண்களை வலுவூட்டும் திட்டங்கள் நடைமுறை!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

இலங்கையில் பெண்களை வலுவூட்டுவதற்கான பிரதான திட்டத்தைத் தயாரிப்பதற்காக அடுத்த வருடம் பெண்கள் மாநாடு ஒன்று நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களை வலுவூட்டுவதற்கும் அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களில் பல புதிய சட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடியில் பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நாட்டின் வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கத் தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும். நாம் இப்போது அந்தச் சமூகக் கட்டமைப்பை மீட்டெடுக்க வேண்டும். நாம் வித்தியாசமாக சிந்திக்கவேண்டும். அரசியலில் பெண்களைப் பற்றி மட்டும் பேசாமல், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவத்துறையில் உள்ள பெண்களைப் பற்றியும் பேசவேண்டும். அதன் விதம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# 12 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம் தந்தை, சகோதரர்கள் கைது

கொழும்பு, செப். 18

12 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தை மற்றும் இரண்டு சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

47 வயதுடைய தந்தையும் 18 மற்றும் 15 வயதுடைய இரு சகோதரர்களுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் குறித்த சம்பவத்தை எவரிடமும் கூறக்கூடாது எனச் சிறுமியை அச்சுறுத்தியுள்ளதால் சிறுமி இது தொடர்பில் தனது தாயிடம் தெரிவிக்காமலிருந்த நிலையில் சிறுமியின் வீட்டுக்குச் சென்ற உறவினர் ஒருவர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற நிலையில் சிறுமி இதுதொடர்பில் தனது தாயிடம் தெரிவித்துள்ளார்.

தாயாரின் முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகநபரான தந்தை மற்றும் இரு சகோதரர்களைக் கைது செய்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணத்தைப்...

தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து நேற்று இடம்பெற்ற மிகப்பெரும் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள வேட்பாளர்கள் பணத்தை வழங்கினால் வெற்றிபெறலாம் என நினைக்கிறார்கள். அவர்களுக்கு தரகர்களாக தமிழ் அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர்.

நாட்டில் புரையோடியுள்ள இனப்பிரச்சினை முதல் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட நகர்வுகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன. அது மட்டுமல்லாது காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள் இன்னமும் தீர்வு இன்றி நீண்டு கொண்டே செல்கின்ற நிலையில் தேர்தலில் வழங்கும் வாக்குறுதிகள் அதிகாரத்துக்கு வந்த பின்னர் மறையும் நிலை காணப்படுகிறது. இதனால்தான் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தவும் இம்முறை தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற நகர்வுக்கான அவசியம் ஏற்பட்டது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒரே குரலாக தமிழர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தவே பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டார். பொது வேட்பாளர் என்ற விடயத்தில் கட்சி அரசியல் முதன்மைப்படுத்தப்படவில்லை.

தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தி வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கான விடிவை எதிர்நோக்கிய ஒரு குறியீடாகவே தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார்.

பொதுவேட்பாளர் என்ற விடயத்தை பலர் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் சிறு குழு ஒன்று குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், சிங்கள வேட்பாளர்களிடம் பணத்தைப் பெற்றுகொண்டும் பொதுவேட்பாளர் என்ற நகர்வை எதிர்க்கின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது தமிழ் தேசியத்தின் வழியில் தமிழ் மக்களின் நலனை நோக்கிய பயணம்.

தமிழ் மக்களின் குரலாக எமது அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கினால் மட்டுமே தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதை தெற்கின் முகத்தில் அறைந்து கூறக்கூடிய காலம் கனிந்திருக்கின்றது. இன்னும் சில தினங்களில் நடக்க உள்ள ஜனாதிபதித் தேர்தலில் நாம் பொது வேட்பாளருக்கு வாக்குகளை வழங்கி அதை செயற்படுத்திக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஆகவே நீங்கள் அனைவரும் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை வெளிப்படுத்துங்கள் - என்றார். (அ-ஒ-125)

## மருத்துவர்கள்...

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மருந்துப் பற்றாக்குறை, அதனால் ஏற்பட்ட பாதிப்புகள், அதை நிவர்த்தி செய்ய அவசரமாக கொள்வனவு செய்யப்பட்ட தரம் குறைந்த மருந்துகள் தொடர்பாகவும், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகவும், மருந்துகளின் கொள்வனவில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாகவும் நாடளாவிய ரீதியில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினராகிய நாம் இதற்கு எதிராகக் குரல் கொடுத்ததோடு மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களையும், ஊடக சந்திப்புகளையும் நடத்தியிருந்தோம்.

மக்களுடைய நன்மையைக் கருத்தில் கொள்ளாது செயற்படும் அதிகாரிகள் மக்களுக்காகக் குரல் கொடுத்த மருத்துவர்களைப் பழிவாங்கும் நோக்குடன் எமது தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பித்தனர். ஒருதலைப்பட்சமான, தகுந்த தொழில்நுட்ப அறிவற்ற விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டு இவ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதனை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளாது உயர்நோக்குடன் செயற்படுபவர்களின் குரலை நசுக்க இவர்கள் முற்படுகின்றனர். இதனை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் கடந்த 3ஆம் திகதி மதியம் பன்னிரண்டு மணி தொடக்கம் ஒரு மணி வரை அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தோம்.

இருப்பினும் இது தொடர்பாக சரியான தீர்வு எட்டப்படாத காரணத்தால் இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணி வரை நாடளாவிய ரீதியில் அடையாள பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை மேற்கொள்ள இருக்கின்றோம். இதன்போது அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனையவை நிறுத்தப்பட்டு இருக்கும் - என்றுள்ளது. (அ-ஒ-20)

## அநுரவையும்...

கடைகள் திறக்கப்பட்டுள்ளன. கஷ்டப்படும் போது வராமல் இப்பொழுது தேர்தலுக்காக உங்களிடம் வந்திருக்கும் இவர்களைத் தும்புத் தடியால் அடித்துத் துரத்தவேண்டும். வாயில் இருந்து உமிழ்நீர் வடிய வந்து 'பதவியை எனக்குத் தாருங்கள்' என்று கேட்கிறார்கள். இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாரில் நேற்று இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பல கஷ்டமான முடிவுகளை எடுத்தேன். அதனை நீங்கள் தாங்கிக் கொண்டீர்கள். சிலர் ஒருவேளை தான் சாப்பிட்டார்கள். நீங்கள் உங்களின் பொறுப்பைச் செய்தீர்கள். அவர்கள் தமது பொறுப்பை நிறைவேற்றினார்களா, தேர்தலை நடத்துமாறு முதலில் கோரினார்கள். உரம் இல்லாத நிலையில் தேர்தல் நடத்தி என்ன பயன்? படகுகளுக்கு எரிபொருள் இல்லாத நிலையில், தேர்தல் நடத்தி பயனிருக்கிறதா? அதனால் முதல் பணியாக உரத்தைப் பெற்றுக் கொடுத்தேன். எரிபொருளை கொடுத்தேன். அந்த நிலையில் எனக்கு எதிராக நீதிமன்றம் சென்றார்கள்.

தற்பொழுதும் கடினமான நிலை உள்ளது. சமையலறையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எனக்குத் தெரியும். அதனால் தான் சுமுக நிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளேன். சம்பள உயர்வு வழங்கினேன். அஸ்வெசும வழங்கினேன். அது போதுமானதல்ல. அடுத்த வருடம் மேலும் சலுகை வழங்கவேண்டும்.

வரியைக் குறைப்பது ஐ.எம்.எப். நிபந்தனைக்கு முரணானது. சஜித்தும் அநுரவும் சொல்வதைப் போல தற்போதைய நிலையில் வரியைக் குறைத்தால் வருமானம் குறையும். நெருக்கடி ஏற்படும். மேலும், இந்தப் பகுதியை சூரிய சக்தி மையமாக மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். தெளிவான திட்டத்துடன் மக்களிடம் வந்திருக்கிறேன். இந்தப் பிரதேசத்தில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து மக்களுக்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகின்றோம்.

புலிகள் இயக்கத்தில் இணைந்த குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் பலரை விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். மன்னாரில் உள்ள சிங்களக் கிராமங்களில் வாழும் மக்கள் அஞ்சத் தேவையில்லை.

மன்னார் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டு, மன்னாரிலிருந்து திருகோணமலைக்கு புதிய பாதை அமைக்கப்படும். இப்பிரதேசத்தை நாம் முன்னேற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்" - என்றார். (அ-ஒ-இ)

## சார்ள்ஸ்...

அதன் பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதியை சார்ள்ஸ் நிர்மலநாதன் வரவேற்ற பின்னர், இருவரும் சமகால அரசியல் விவகாரங்கள் குறித்து சிறு உரையாடலிலும் ஈடுபட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அகில இலங்கை இளைஞர் அமைப்பின் உபதலைவர் சட்டத்தரணி டினேஷ் தலைமையில் மன்னார் மாவட்டத்துக்குட்பட்ட பிரதேசசபைகள் மற்றும் நகர சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் குழுவினர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றிக்காக தம்மை அர்ப்பணிப்பதாக அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர் என ரணிலின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## வட்டுக்கோட்டையில்...

தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி கிளையின் செயலாளர் பற்றிக் தனுஷ் தலைமையில் இடம்பெற்ற 'நமக்காக நாம்' பொதுக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ. சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்த சி. அ. யோதிலிங்கம், மூத்தபோராளி செழியன், தமிழரசுக் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், பிரமுகர்கள் எனப்பலரும் பங்கேற்று சங்கு சின்னத்துக்கு ஆதரவாக உரையாற்றிருந்தனர்.

இதன்போது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், பிரதேச மக்கள் என நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். (அ-ஒ-27-100-125)

## ஊனிலும்...

சாப்பிடுகின்றனர். இந்த நாட்களில் அவர்கள் அரசியல் தேனிலவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். என்னைத் தோல்வியடையச் செய்வதே அவர்களுடைய 'டீல்'. இந்த டீல்களுக்கு இடமளிக்கமுடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் கதிர்காம புண்ணிய பூமிக்கும் மதுபானசாலை அனுமதி பத்திரத்தையும், பியர் அனுமதி பத்திரத்தையும் வழங்கி இருக்கிறது. விரைவில் மிகிந்தலை புண்ணிய பூமியிலும், அடமஸ்தானத்திலும் சொலஸ்மஸ்தானத்திலும் மதுபான சாலைகளைத் திறக்கக்கூடும். மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களையும், வைன் ஸ்டோர்ஸ் அனுமதிப் பத்திரங்களையும் வழங்குவது அரசாங்கத்தின் கொள்கையாக மாறி இருக்கின்றது. நாம் அதிகாரத்துக்கு வந்த உடனே இந்த அனுமதிப் பத்திரங்கள் அனைத்தையும் இரத்து செய்வோம். வரப்பிரசாதங்களுக்காகவும் சலுகைகளுக்காகவும் அரசியல் இலாபங்களுக்காகவும் வழங்கப்பட்ட இந்த மோசடிச் சலுகைகள் அனைத்தையும் அகற்றுவோம் - என்றார். (அ-ஒ-இ)

## சஜித்துக்கு...

எழுப்பியுள்ளது. தமிழ்த் தேசிய பொது வேட்பாளர் பா. அரியநேந்திரனை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவ்வாறு கேள்வி எழுப்பியது.

அத்தோடு எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் இணைத்து பயணிக்கவேண்டும் என மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-ரி-20)

## வினாத்தாள்...

பட்டுள்ளது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் சில வினாக்கள் வட்ஸ்அப் செயலிமூலம் பகிரப்பட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.

குறித்த விடயம் தொடர்பில் வினாத்தாளைத் தயாரித்த பரீட்சை சபையுடன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இந்த நிலையிலேயே, குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ-ச)

## தேர்தல்...


இன்று நள்ளிரவுக்குப் பின்னர் தேர்தல் பரப்புரை, பேரணி, துண்டறிக்கை விநியோகம் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - ஜனாதிபதித் தேர்தலுக்கான இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் இன்றையதினம் இடம்பெறவுள்ள நிலையில் பிரதான பரப்புரைக் கூட்டங்களை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 03 . 1943



மறைவு 16 . 09 . 2024

## கனகரத்தினம் தில்லைநாதன்

யாழ் ஆனைப்பந்தியடியை பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் றோட் தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் தில்லைநாதன் நேற்று முன்தினம் (16.09.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-துரையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணேசு, மனோன்மணி, கண்ணம்மா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, சொர்ணலிங்கம், பரமேஸ்வரி, அரியமலர் மற்றும் ராஜேஸ்வரி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.09.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 933 2868, 074 255 2280
(CS 56244) V-1

யானைகளிடமிருந்து

# வாக்காளர்களை காக்க நடவடிக்கை

வாக்காளர்களை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யானைகளின் அச்சுறுத்தல் உள்ள கிராமப்புறங்களில் வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்குச்சென்று வாக்களிப்பதில் சில இடர்பாடுகளை எதிர்கொள்ளக்கூடும்.

குறிப்பாக பொலநறுவை மாவட்டத்தில் நூறு வாக்குச்சாவடிகள் யானைகளின் அச்சுறுத்தல் உள்ளனவாக காணப்படுகின்றன.

இவ்வாறு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படும் வாக்குச்சாவடிகளில் வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் நோக்குடன் வெடிகளுடன் தயார் நிலையில் இருப்பார்கள். யானைகளிடமிருந்து வாக்காளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் தேவைப்படும் இடங்களில் வலைகளும் அமைக்கப்படும் எனவும் வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-6)


### மெத்தை தைப்பவர் தேவை

நிறுவனத்துக்கு Order க்கு
பஞ்சு மெத்தை தைப்பவர்கள்
தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 076 637 7441

### பணிப்பெண் தேவை

யாழ் நகரில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிய 45 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் ஏனைய சலுகைகள் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 986 3097

### வேலையாட்கள் தேவை

மேசன், கூலி,
வெல்டிங் வேலை
ஆட்கள் தேவை.
077 322 4000
(CS/56242) J-1


# நெஞ்சகலா நினைவுகள்



அமரர் சுந்தரப்பிள்ளை
குணசிங்கம்


மண்ணோடு உங்கள் பூதவுடல்
மறைந்து விட்டாலும் - நினைவுகள்
எங்கள் இதயத்தில் இருந்து ஒருபோதும்
மறைவதில்லை.. பாசமான
நினைவுகளை எம்மிடம் விட்டு சென்றீர்
ஐயாவே !! உங்கள் ஆத்மா இறையின்
பாதங்களில் சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

தோற்றம் 20.12.1939 மறைவு 16.09.2024

பிள்ளைகள், மருமகள்கள்,
மருமகன்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(CS/28447) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 02 . 1968



மறைவு 16 . 09 . 2024

## A.R.D.V. கிருஷாந்தன் (சாந்தன்)

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும், மல்லாகம், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட A.R.D.V.கிருஷாந்தன் (சாந்தன்) அவர்கள் கடந்த 16.09.2024 திங்கட்கிழமையன்று கொழும்பில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜகாரியர் - செல்வமலர் தம்பதியரின் அன்பு புதல்வனும், குஷாந்தன் (பாபு), நிருக்ஷி, சுதர்சன் (சுதா), சசீந்திரன், வசந்தன், மற்றும் காலஞ்சென்றவர்களான குஷிட்டா, ரேணுகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தேவராணி (கலா) அவர்களின் அன்புக் கணவரும், நிரோஜினி, நிலக்ஷி, சலோமி நஜிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானவேல் (சிவா), துஷியந்தன், தனுசன் ஆகியோரின் அன்பு மாமனும், சிவகுமார் (சிவா),ஸ்கந்தராசா (பாபு), அலன்மற்றின் ஜோய், புனிதம், ரஜனி, ஜனனி, ரமா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சந்துரு, துஷ்யந்தன், நிதர்சன், துஷ்யந்தி, சயந்தன் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், நிக்சன், யதுஷன், விஜனன், டினுசன், தர்ஷினி, டலிக்கா, அல்வின், அலஸ்ரினா ஆகியோரின் அன்பு மாமாவும், டிலக்சன், சிந்துஷன், பிரவிஷன், வைஷ்ணவி, சகானா, கிருத்திகா, வினுசன், பிரவிஷ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், ஷிபியா, ராகுல்,அரீஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனைகள் இன்று (18.09.2024) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சகோதரன் சுதர்சன் (சுதா)
குடும்பத்தினர்.
077 467 0561

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 . 09 . 1945



மறைவு 19 . 08 . 2024

## கணேசன் நிர்மலா

(ஓய்வு பெற்ற முன்பள்ளி ஆசிரியை)

திதி : ஆவணிப்பூரணை அமிர்தசித்தம்

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.09.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல 22, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 922 9075
(CS/56240) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org